உ

சுப்பிரமணியன் துணை.

பெங்களூர்

# ஆதிவிநோதசபை

# இந்திரசபா.

**புதிய பதிப்பு.**

இதிலனேக நூதன ஜாவளிகள், தில்லானக்கள்,
கஜல்கள், சங், டோம்ரிகள் முதலானவை
சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இஃது
கும்பகோணம்
சரவணமூர்த்திசுவாமிகளின் மாணாக்கராகிய
தி. தி. அப்பாவுபிள்ளையென்னும்
இயற்பெயருடைய
**முத்துசாமிப்பிள்ளை அவர்க**
ளியற்றி,

ம-ள-ள-ஸ்ரீ அத்திப்பேடு
**தாயுமானமுதலியார் அவர்களால்**
பார்வையிடப்பட்டு

V. P. N. என்பவருக்காக
சென்னை:
கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

காப்பி ரயிட்டு ரிஜிஸ்டர் செய்திருக்கின்றது.
*Registered Copy-right*

1889.

# முகவுரை.

அடியேன் கூடிய பிரயாசையை வகித்தெழுதிய பலநாடகங்களுள் இதையும் ஒன்றாகப் பாவிப்பீர்களெனக் கருதி இந்நாடகத்திலடங்கிய முக்கியகருத்தை அடியில் வருமாறு விளக்குவேனாக. அதாவது: இவ்விந்துதேய வாசிகளாகிய நம்மவர்களுள் ஒருவர்பெற்ற கன்னிகையை மற்றொருவனீன்ற செல்வச்சிரஞ்சீவிக்கு பந்துமித்திரர்களறிய, வேதவேதியர் ஆசாரியர் முதலான முதியோர்கள் காண, வேதாகமவிதிப்படி மந்திரங்களை வேதியர்கள் ஓத, ஓமதூபம் மணமகன் மணமகள் ஆகிய இருவர்மீதுதாக்க, சுபமங்களவாத்திய மொலிக்க, மாதாபிதாக்கள் மனமொத்து தானஞ்செய்கின்றனர். அதன்பின் தம்பதிகளிருவரும் ஒருவரையொருவர் சீரிலுஞ் சிறுமையிலும் ஒத்து உடன்பட்டு இணைபிரிவதில்லையென அக்கினி தேவன் பூமாதேவி ஆகாயவாணி இவர்கள் சாக்ஷியாகச் சொல்லுகின்றோம் என்கிற மந்திரத்தால் கட்டுப்பட்டு, மணமகன் தரிக்கும் மாங்கலியத்திற்குத் தன்கழுத்தி லிடந்தந்த மணமகள், தன்னை மணந்த மணாளனுக்குத் தெய்வச்செயலாய் சிறுமைவந்திடக்கண்ட காலை அம்மாது தன் [illegible]ன்மையை மறந்து, குலநெறியைக் கடந்து, விதிவசமாய்க் க[illegible]வனுக்கு நேரிட்ட வறுமை தனக்குமே வாய்ந்ததாக பாவிக்க[illegible]ல் 'குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்' என்பதை மனதில்கொண்டு நீடூழிகாலம் புகழுடம்பெடாமல் சபலபுத்தியடைந்து, பின்பவனை விட்டுநீங்கி, மதிஹீனர்களாய் அன்னியபுருடனை இச்சித்து, அதற் கதுவும்போய் இதற் கிதுவும்போய் என்றபடி அங்குமிங்கும் எச்சிலுக்கலையுஞ் சுணங்கத்தைப்போல் ஆதாரவின்றி கணவனோடொத்துவாழும் கன்னிகைகளைக் கண்ணுற்ற காலை இஞ்சிதின்ற குரங்கைப்போல் முகத்தைச் சுளித்துத்திரிவதை நாம் கண்ணுற்று வருகிறோமல்லவா.

இதிற் சுட்டிப்பேசும் ஊர்வசி என்னும் நாட்டியப்பெண், தான் கருதிய ஓரரசனுக்கு இந்திரனால் நேரிட்ட கடுங்காவல், அம்மன்னன் தன்புத்தியைக் கேளாமல் தன்னைத் தொடர்ந்துவந்ததால் நேர்ந்த தீங்கென எண்ணி அவனை யசட்டைசெய்யாமல், தன்னாலியன்றமட்டிலும் தக்க பிரயத்தனங்களைச்செய்து, இந்திரனை தன்வசமாக்கி, 'வேசிக்கு காசுமேல் ஆசை' எனும் பழமொழிக்கு நேர் விரோதமாய், இந்திரன் பலமுறையும் கொடுக்க

ஆக்யாபித்த பல வெகுமதிகளையும் மறுத்து, தன் மனதில் மதிப்பிட்டிருந்த மன்னனைக் கொடுத்தாற் போதுமென உறுதிகொண்டிருந்து, அவனைக் கைப்பற்றியதாய் இந்நாடகத்திற் காணும் எமது நேயர்களும் என தன்புக்குறிய சகோதரர்களும் என தருமைதங்கிய சகோதரிகளும் தீர்க்காலோசனைசெய்து, ஒரு வேசிக்கே இவ்வித மனவுறுதி யிருக்கையில் உத்தமகுலத்திற் பிறந்த பெண்களுக் கிதைவிட எண்மணங் கதிகமெனக் கவனித்து மாதர்கள் தங்களை மணந்த மணாளனுக்கு எவ்வித துயர்வரினும் ஒத்துடன்பட்டு, ஓய்வுகாலத்தை வீண்பொழுதாய்ப் போக்காமல், வேதசாஸ்திர புராண இதிகாஸ புண்ணிய சரித்திர முதலானவைகளை வாசித்து அல்லது ஒருவரால் வாசிக்கக்கேட்டு, நன்னெறியில் நின்று, நல்வழியிற்சென்று, பிறந்த வீட்டாருக்கும் புகுந்த மனையாருக்கும் என்றும் அழியாப்புகழை நாட்டுவாரென அடியேன் அதி ஆவலோடு இதை இயற்றிய கருத்தைக் கைகூடச் செய்வரெனக் கரங் கூப்புகின்றேன்.

…தற்கும் விலாசமெனப் பெயரிடாமல் சபாவென வமைத்த … னினின், ஒரு பெண்பாவை தன்னுருமாறி, இராஜசபையை … டைந்து, அச்சபை களிக்குமாறு ஆடல் பாடல் புரிந்து, தான் கருதியதைக் கைப்பற்றியதால் சபாவென அமைக்கலாயிற்று. இதில் முன்பதிப்பைவிட வனேக நூதன டோம்ரி, கஜல், ராய், தில்லானா, ஜாவளிகள் முதலானவைகளை புதிதாய்ப்பாடி சேர்த்திருக்கின்றேன். அவைகளோ வாசிக்கும் அல்லது கேட்கும் அன்பர்களின் மனதை ஆனந்தவாரியில் மூழ்கச்செய்யும் என்பதற்கோர் ஆக்ஷேபணையும் இல்லை இல்லை. இதுவரையிலும் இச்சென்னை புதுவை பெங்களூர் முதலான விடங்களில் பலவாரச்சிட்டு விற்பனை செயப்பட்டுவரும் இந்நாடக முதற்பதிப்பைப் பார்க்கினும் இப்பதிப்பு அதிமேன்மைதங்கியது. அதி திவ்யமான வர்னமெட்டுகளுள்ள பற்பல இசைகளையடங்கி யிருக்கின்றது. அன்றியும் இவ்விந்திரசபாவினுடைய பாத்திய சம்மந்தத்தை V. P. N. என்பவருக்கு நான் கொடுத்துவிட்டபடியால் அவருடைய அனுமதியின்றி இப்புத்தகத்தை எவராகிலும் அச்சிடுவார்களாகில் அவர் கோரு நஷ்டத்திற்கு பாத்தியமாவார்களென இதனால் பயரங்கமா யறியவும்.

ஊழியன்

தி. தி. அப்பாவுபிள்ளை.

உ

முருகன்துணை.

# இந்திரசபா.

இந்திரன் விருத்தம்.

முன்னையநிருபமாகி மூவரினுருவுமா ...கி
நன்னயசராசரத்து ளுடியுமெங்குமொன்று ...ய்
தன்னையேயறிந்தசான்றோர் தாவியேபோற்றுநா ...தா
என்னையேநாளுங்காக்க வேற்றினேனீசாபோற் ...றி.

மந்திரி விருத்தம்.

சுரர்முதற்றவத்தர்நாளுஞ் சொல்லியேயேற்றநீதி
உரமுடனியற்றியிந்த வும்பருக்கெல்லாஞ்சான்ற
கிரமமுநெறியும்வேதக் கேள்வியும்பலிக்கச்செய்யுந்
தரமுளவெங்களிந்திர தாணுவேயுன்றாள்போற்றி.

(மந்திரி வசனம்.) எங்கள் ஆண்டவனாகிய இந்திரராஜே போற்றி.

(இந்திரன் வசனம்.) அப்பா மந்திரி! அட்டதிக்குப் பாலகர்களும் நவக்கிரகாதி பதிகளும் தங்கள் தங்கள் காரியங்களில் ஏதேனுங் குறைவுகாட்டாமல் நடாத்தி வருகின்றார்களா?

(மந்-வ.) குறைவின்றி நடத்திவருகின்றார்கள் ஆண்டவா.

(இந்-வ.) சந்தோஷம், மந்திரீ! இன்று நமது சபை ஒருவாறாய்க் காணுங்காரணம் எதுவாயிருக்கும்? சொல்லுவாய்.

(மந்-வ.) அரசே! நடனப்பெண்கள் இன்னும் வந்து நடிக்காதிருப்பதே காரணம்.

(இந்-வ.) நீ சொல்வதுஞ் சரிதான், ஆனால் அவர்களை சீக்கிரம் அழைத்து வரச்செய்வாய். எனக்கும் ஏனோ மனம் ஒருவிதமாய் வெறுப்புத் தட்டுகின்றது.

(மந்-வ.) அப்பா கட்டியனே! நீ சென்று அப்சரப் பெண்களை சீக்கிரஞ் சபைக்கு வரச்செய்வாய்.

(கட்டியன் வசனம்.) நல்லது சுவாமி!

இந். ஜாவளி. இரா - அபுரூபம். தாளம் - சாப்பு.

ஓ ஓ ஓ ஒருவாறாய்த் தோணுதே.

வனக்குயில்போல்மொழி வாய்ந்தரம்பாயினம்
வாராதிருப்பதேனோ வழுத்துவாய்நீதான் - ஓ.

---

பொது கண்ணி.

வாராளிதோ ரம்பையெனும் வஞ்சியோடியே
சீராய்நேராய் யிந்திரசபைச் சேரநாடியே

இந்-கண்ணி. இரா-காபி, தா-ஆதி.

ஏனோமனம்வாடுதிதோ இன்றுதானுமே
தேனாள்ரம்பைவாராதேனோ தெரியவேண்டுமே

(ரம்பை வசனம்.) போற்றி போற்றி ஆண்டவா!

(இந்-வ.) மாதே! நான் உன் ஆடல்பாடல்களை பார்க்கா திருப்பது அடுக்குமா?

(ரம்-வ.) அப்படியா! நடிக்கிறேன், உல்லாசங்கொள்வீரா!

ரம்பை. ஜாவளி, இரா.- காபி, அடதாளம்.

ஆன ...லம்தேனிங்கு அரசேபாருமே
...ன்பாலெனைமனமுகந்து அணையவாருமே
மோகமீறுதையேயென்றன் முகத்தைப்பாருமே
முத்தமிட்டென்தனத்தைத்தொட முறைதான்வாருமே
காமத்தாலேமோகமீறிக் களைத்தேன்பாருமே
காமசரந்தைக்குதென்னைக் காக்கவாருமே
வெறுத்துயென்னைப்பார்ப்பதென்ன விதமோநீருமே
வேண்டிக்கொண்டேன்கோபம்போக்கி விரைவாய்சேருமே

---

ரம்பை. தில், தா - ஆதி.

நாதரதீம்தீம்தநாதீம்தநா சமகமபதநிசநிதபம - நாத.

தீம்தீம்தநந திக்ராதோதாதொதாநி - நாத.

ஏன் ஏனினியடா இந்திரனே மோடிசாமி - நாத.

நான்உனையேநம்பியே வந்ததும்
நாடியகருத்தையும் நீயறியலாகும்



தாதாகிடதக தும்மிகிடதக
திரியாநாரோதநநம்
வாதாமோடா சூதேனடா
வருந்துறேனே வாடிப்பாடி
மகரிச-கரிசநி-ரிசநித-சநிதபம - நாத.

(இந்-வ.) சந்தோஷம், அடி கண்ணே! எந்தன் அருகில் வந்திருப்பாய் பெண்ணே!

---

இந்திரன் கண்ணி.

ஏதோவொருவிதமாக இன்பங்கொண்டேனுன்
இன்னமேனகையும்வாரா திருப்பதேனோதான்
பதைக்கப்பதைக்கபலர் பார்த்துமெய்மறந்திடும்
பாவைமேனகையெங்கே பகருவாய்நீதான் - ஓ.

(பொது-கண்.) ஆடல்பாடலனுதினம் அடியாள்வேலையே
ஆனந்தமயமான மேனகைதன்வேலையே

(இந்-வ.) அடி மாதே! மேனகா? இன்னம் ஏன் என் செவிக்கு இன்பங்கொடுக்காமல் இருப்பது, உனக்கு அழகா.

---

மேனகை. ஜாவளி. இரா-பியாக், தா-ரூபகம், மிஸ்ரம்.

ஓ மதனே! மையலானேன் மருவவாருமே
பேதம்யென்னலாமோநானே பேதைபாருமே - ஓ.
மோகமீறியோடிவந்தேன் மோடியாகுமோ
வேகமாயெனைக்கூடாவிடில் விரகம்போகுமோ - ஓ.
காமமீறிவந்தமாதைக் கசறலாகுமா
சோமவேளைகாலம்போனால் சுகத்தையீகுமா - ஓ.
தானாயோடிவந்தவென்னை தடுக்கப்போகுமா
மானாபரணயிந்தக்கோப மனதிலாகுமா - ஓ.

---

மேனகை. தில்லானா. தா-ரூபகம்.

தாநி உதநித்ராதா நித்ரதாநி தில்லில்லா நாதிரதிர.

நாதரதீம் நாதரதீம் தீம் தீம்
ஏலலி ஏலலி தளங்குதக ததிங்கிணதோம்
தளங்குதக ததிங்கணதோம் தளங்கு - தாநி.

ஆதர்வார் ஆதரவார் பார் பார்
தேவனே தேவனே அணைந்துசுகந் தந்
திடுவீர் அணைந்துசுகந் தந்திடுவீர் அ - தாநி.

(இங்-வ.) ஆஆ அடி மோகனங்கி! இங்குவா, என் அருகில் சேர்ந்தாப்போல் நிற்பாய் குயிலே.

---

(இங்-கண்.) திகைத்துதிகைத்துசுரர் தேடும்நளிருடைய்
திலோத்தமாயெங்கனே தெரிவிப்பாய்நீதான் - ஓ.
(பொ-கண்.) இதோவாராள் திலோத்தமையென்னுமடமானே
சதாபூவின்வாசனைகள் சார்ந்திருப்பவள்தானே
(இங்-கண்.) மோகநாணிமீட்டும் முகிலுடையோளாம்
மொழியாய்குயில்திலோத்தமைமுறையினிமேலாம்

---

திலோத்தமை ஜாவளி. இரா-காபி, தாளம் - ரூபகம்.

சாமியுன்னைநாடிவந்தேன் சரசனேபாரும்
சரணஞ்சரணமிதோயிதோ சங்கையேன்வாரும்
காமமிதோமீறுதடா கருணைசெய்குவாய்
...மொழியைவிடும்விடுங் காதல்ஈகுவாய்
மேனிவாடமதன்கணைகள் மேவநோவுதே
மாணியுனைக்கண்டவுடன் மையலுந்தாவுதே
இளஞ்சகிக்கலாகாதையோ யென்னைப்பாரடா
ஏழைதடையோடிவாவா யிங்குசேரடா

---

திலோ-தில். தா - ஆதி.

தநநதந்திரதாநி தொந்தரதாநிதீம்த
தநநந தநதிமி திமிகுகுந் தகுநதரி
தநதீம் திமிதீம் ஏலலி ஏலலி
தீம்தர தோம்தர தீம்தரந. . ... ...த.
இனியுனைக்கூடிடமனம் ஆகுதுபார்சாமி
அடமது செயமனம்
அடுக்குமோ தினம்தினம்
அதியே மதியே பதியே ததியே
ஆகுமா போகுமா அனங்கன் வேதை.



பநிதநி சாரிகரிக சாரிகரி சநித
கரிரிசா நிசரிச கரிரிச நிசரிச கரிரி கரிரி கரிரி கரிரி
சாரிக சாரிக ரிசநித ... ... ...த.

(இங்-வ.) அடி ராஜாணீ! ஓடிவா, என் அருகே நில், உனக்கும் சுகம் எனக்கும் சுகம்.

(இங்-கண்.) இன்னஞ்செவிக்கின்பம்வர வில்லையேஏனோதான்
அன்னநடைஊர்வசியை யழைப்பிப்பாய்நீதான்
உரைத்து உரைத்துமொழி யுருக்கிமனதை வாட்டும்
ஊர்வசிதா னெங்கோ வுரையடாநீதான் ஓ.

(மங்-வ.) இதோ அழைப்பிக்கிறேன் வேந்தே. அப்பா சேர்வை! சீக்கிரம சென்று ஊர்வசியை அழைத்து வருவாய்.

(சேர்வை வசனம்.) நல்லது சுவாமி.

---

சந்தனராஜன் கொலு விருத்தம்.

தன்னிலேக்கடலே தயாகுணத்தானுவே
வின்னமதறியா வேறுருவெடுக்கா
அன்னவர்க்கமுதே அருமறைப்பொருளே
என்னகர்செழிக்க எண்ணுவாய்போற்றி.

(மங்-வ.) போற்றி போற்றி எங்கள் ஆண்டவனாகிய ச..தன மகாராஜே போற்றி.

(சந்தனராஜன் வசனம்.) மந்திரீ! நமது நாட்டில் குடிகளெல்லோரும் சுகமா?

(மங்-வ.) அதிக களிப்போடு இருக்கின்றார்கள் வேந்தே.

(சங்-வ.) அப்படியானால் சந்தோஷம், தோழனே.

(கட்டியன் வசனம்.) சுவாமீ! பராக்கு, குடிகள் இரங்கிய முகத்தோடு வந்திருக்கிறார்கள், வேந்தே!

(சங் - வ.) மந்திரீ! என்னகாரணமாய் இருக்கும்? குடிகள் முகம் இரக்கமாய் வந்திருப்பதை யோசித்து உரைப்பாய்.

(மங்-வ.) அரசே! அவர்களுக்கு முதற் பிரயோஜனத்தை தருகின்ற பயிருக்கு என்னமோ கெடுதி நேரிட்டதாகக் காணுகின்றது.

(சங்-வ.) அப்படியா, அவர்களை இங்கு அழைத்து வருவாய்

(குடிகள்வசனம்.) போற்றி போற்றி மகாராஜனே! நாங்கள் இட்ட பயிரையெல்லாம் காட்டுமிருகங்கள் வந்து அழிக்கின்றன, என்னசெய்வோம் சுவாமி.

(சங்-வ.) மந்திரீ! வேட்டைக்குப் போகவேண்டும், வேடர்களை வரவழைப்பாய். குடிகளே! நீங்கள் செல்லுங்கள், இதோ நான் வந்தேன். மந்திரீ! இவர்களுக்குத் தக்க வெகுமதிகள் கொடுத்து அனுப்புவாய்.

(மங்-வ.) அப்படியே செய்கின்றேன் ஆண்டவா.

(சங்-வ.) மந்திரீ! உன் புத்திக்கு மெச்சினேன், நான் உடுத்திக்கொண்டு வருகின்றேன், நீயுஞ் சித்தப்படுவாய், மந்திரீ! பார்த்தையா, பயிர்களெல்லாம் அதமாகிவிட்டன, இனிக் காலம் போக்கப் போகாது, நான் முன்னோக்கிச் செல்கின்றேன், நீங்கள் என் பின்பற்றி வருவீர்கள்.

---

சங். கண்ணி. இரா-சங்கரா, தா-சாப்பு.

போகுதுபார் ஒருமான் அதிவேகமதாய் - போகுதுபார்
புதையக்கால் பதிய அவ்வதியிற் கும்பதைநாடி. (போ)
எய்கிறேன்பார் ஈரம் பவைமேல் விரைவாக
ஏங்கிப்பின் வாங்கிச்சரந் தாங்கியுயிர் நீங்கிச் சாகுதுபார்.

(சங்-வ.) அப்பா மந்திரீ! பார்த்தையா, நான் மிருகங்களையெல்லாம் வதைத்து ஓட்டினேன், அவைகளை மறுபடியும் இங்கு நாடவொட்டாமல் வாட்டுவீர்கள், எனக்கோ மெத்தவும் தாகமாயிருக்கின்றது, இவ்வனத்துட்சென்று நீர் அருந்தி வருகிறேன், நீங்கள் இங்கேதானே யிருங்கள்.

(மங்-வ.) சுகமாய்ப் போய்வாருங் கோவே.

(சங்-வ.) ஆஆ! இந்தவனத்தில் எவ்வளவு புலந்தான விருட்சங்கள் இருக்கின்றன? நாட்டில் வசிப்பதைவிடக் காட்டில் வசித்தால் அதிக சுகத்தை அடையக்கூடுமல்லவா? இங்கே இருக்குங் குணத்தை உணர்ந்தல்லவா யோகிகள் முனிவர்கள் நாடு நகரங்களை அணுகாமல் காடுறைந்திருக்கிறார்கள். ஆஆ! அந்த விருட்சத்தின்மீது கிள்ளைகள் கும்புகும்பாய் தாவுதலைப்பார். அவைகள் பேடுகளுடன் ஆனந்தமாய் விளைவுந்தொனிகள் செவிகளுக்கு இன்பத்தைக் கொடுப்பதோடு, நமது தாகத்தையுங் கொஞ்சம் போது தணித்தன அடடா! அந்த மயிலின் கூட்டத்தைப்பார், சிறகை விரித்து நடிக்கிற உன்னதத்தை பார்த்தையா? இதனிடம் இவ்வளவு மேம்பாடான செய்கை இருப்பதினால் அன்றோ



சிவசுப்ரமண்யக்கடவுள் தனக்கு வாகனமாக்கிக்கொண் டிருக்கின்றார். இல்லாவிடில் ஏன் வேறொரு மிருகத்தை தீர்மானித்திரார்? இப்பேர்க்கொத்த உன்னத பட்சியின் பேரில் பவனி செய்பவன் எவ்வளவு சரசசல்லாப ரசக்ஞ இருக்கவேண்டும், என்ன லீலாவிநோதியா யிருக்கவேண்டும். இன்னம் முன்னுக்குச்சென்று நமது தாகவிடாயைத் தீர்த்துக்கொண்டு, அதன்பின் இவ்வனத்தில் உள்ள மற்ற விநோதங்களையும் பார்ப்போம். ஆ கடவுளே! இதென்ன நீர் இல்லா வனமா? அப்படிக் கிருக்கிற, இங்கு வசிக்கு மிருகங்களும் பக்ஷிகளும் எப்படி ஜீவித்து வாழ்கின்றன? என்ன விபரீதம்? நான் இவ்வளவுதூரம் வந்தும் ஒரு நீரோடையைக் காணாதவனாயினேன், தாகம் மேலிடமேலிட, நாவோ உலருகின்றது, உடல் சோருகின்றது, என்செய்வேன், என்னுடன் வேட்டைக்கு வந்தவர்கள் அரசன் இன்னமும் வரவில்லையே என்று எதிர்பார்ப்பரோ, மந்திரியோ மெத்தவும் வியாகூல மடைந்திருப்பனே, என்செய்வேன்!

---

சங்-கண்ணி. இரா-நாதநாம, தா-ஆதி.

ஆயீதென்ன ஆச்சரியமே.

நடக்க நடக்க யெந்தன் நாவது உலருதே
நாடிய நீரை நான் அறியே-- (ஆயீ)

கலக்கமும் வலுத்ததோ கனத்தையுங் குறைக்க
கடவுளே ஜலமதை காட்டுமிப்போது. (ஆயீ)

இருசெவி யடைக்குதே ஏக்கமுந்தாக்குதே
எண்ணமுமாறுதே ஈசுவரனே. (ஆயீ)

(சங்-வ.) நல்லது, இந்த மேட்டின்மீது ஏறிநின்று கண்பார்வை யெட்டுந்தூரம் பார்ப்போம். ஆ! அதோ ஒரு திவ்ய பூஞ்சோலை தோன்றுகின்றது. கதலி, பலா, மா முதலிய விருக்ஷங்களுஞ் சேர்ந்து காணுகின்றன. அங்கு அவசியம் ஜலவோணி இருக்கும். சீக்கிரம் போவோம். ஆ! இதென்ன இந்தவனம் தேவவனமா? இந்தத் தடாகத்தின் ஜலம் தேவகங்கையோ? இதில் புஷ்பித்திருக்கும் செந்தாமரை அந்தக் கமலயோனி யுத்பவித்ததேயாகும். நாம் எங்கும் இதுவரையில் கண்டறியோம். ஆ! மல்லிகை முல்லை இருவாட்சி சண்பகம் பாரிஜாதம் மந்தாரம் கொன்றை மருவு இவைகளின் அதி மேன்மையான மணஞ் சகிக்கக்கூடவில்லை, நல்லது நாம் முன்னதாய் ஜலத்தை அருந்தி தாகத்தை தீர்த்துக்கொள்வோம். ஆ! இச்சலத்தின் இனிப்பை

எவ்வாறென வருணிப்பது? இதில் கற்கண்டு கலந்திருக்குமா? யோசிப்போம், இராது. ஆனால் எதுவாயிருக்கும்? இங்கு தெங்கு அதிகமாயிருப்பதினால் இவ்வனத்திற் குடையவன் அவ்விளனீர்களின் நீரை ஓடையாக்கி இருப்பதுபோற் காட்டுகின்றது. அப்படிக்கிருக்கின், இந் நீருக்குப் போக்கிடங் காணாததினால், ஒருவித துர்வாசனைக்கு இடமாயிருக்குமல்லவா? இதுவுமல்ல, பின் எதுவாயிருக்கும்? நமது புத்திக்கெட்டவில்லையே! இந்த வனத்திற்கு உடையவனைத் தேடிக் கண்டு கேட்டறிந்துக் கொள்வோம். இன்றையப்பொழுதை இங்கு நமது பரிவாரத்துடனே போக்கி, நாளை நமது தேசம் போவோம்.

(அவதூதன் வசனம்.) ஆரடா! அங்கு எனது உத்தரவின்றி சிங்காரவனத்துட் பிரவேசித்தவன்? எங்கள் அரசிகண்டால் ஆக்கினை வரும், நில்லடா நில்லு, கள்ளனே நில்லு.

(சங்-வ.) ஆ! இதென்ன? இவன் ஆர்? பூதம்போற் காட்டுதே? இவன் கையிலிருந்து எப்படித் தப்புவோம்? விதியே! நிராயுதபாணியாய்வந்து, ஒண்டியாய் பூதத்தின்கையிற் சிக்கவா விட்டனை?

---

சங்-ஜா. இரா-கமாஸ், தாளம்-ஆதி.

ஈதென்ன கோரமே யிவனுனைக்குஞ்சாரமே.

சய்யுந் திடத்துள்ளனுமிவன்
செய்வது யிவ்வனந்தன்னிலே (ஈதெ)

ளாப்போலெண்ணி நேர்ந்தாப்போல்பேசுறான்
போச்சுதென்கவரமும் புண்ணகையேசுறான் (ஈதெ)

காத்திரமேனியும் கடோரமாந்தொனியும்
பாத்திரமறியாமல் பாவியும்பேசவே (ஈதெ)

(சங்-வ.) இங்கு யோசிப்பதில் என்ன பலன்? அவன் எதிர்க்காமுன் நாமே சென்று வணங்கித் தப்பிப்போவதே காரியம். வந்தனம், ஐயா! நீ யார்? உன்பெயர் என்ன? உன்னூர் எது? இவ்வனம் ஆருடையது? தயவாய் உரைசெய்வாய் அப்பா.

(அவ-வ.) அடா நரனே! நான் இவ்வனங் காப்பவன், நான் இருப்பது விண்ணூர், என் பெயர் அவதூதன், இவ்வனம் மோகினிவனம், இதற்கு எஜமானி எங்கள் அரசியாகிய சுயம்புவல்லி.

(சங்-வ.) அப்படியா! அவள் பேரோ சுயம்புவல்லி என்றால், அவள் ரூபம் இன்னம் எப்படிக்கிருக்குமோ தெரியோம். நாம் இவ்வளவுதூரம் வந்தும் அவ்வழகியைப் பாராமல் போவது அடாது. நல்லது, அவள் எங்கிருப்பதோ விசாரிப்போம். ஐயா காவலனே! உன் அரசி எங்கிருப்பது? அவளுக்கு மணம் ஆயிற்றா? நான் தெரிசிக்கக்கூடுமா? கனிந்துரைப்பாயா? வந்தனம்.

(அவ-வ.) அடா பயித்தியனே! என் அரசி வசிப்பது மேல்லோகம், அவளோ தேவகணம், என் அரசியை நீ பார்த்தால் மறுபடியும் உன்னூட்டை நீ அடைவது துர்லபம்.

(சங்-வ.) அதேன், ஐயா?

(அவ-வ.) எங்கள் அரசியின் காந்தியைக் கண்ட தேவர் முனிவர் சித்தர் முதலானவரும் மதிமயங்கி சொக்கி சோகமடைவர் என்றால், நீ எவ்வளவு? பறதி, சீசீ! ஓடிப்போடா, சோலையில் நிற்காதே நிற்காதே, ஆக்கினைவரும்.

(சங்-வ.) அப்படியா! இதற்கு என்னசெய்வது? நல்லது வருவதெல்லாம் வந்தேதீரும், முன்னிட்ட காலைப் பின்னிடப் போகாது.

---

பொது கண்ணி.

| | | |
|---|---|---|
| வாராளிதோ சுயம்புவல்லி | ெ | போல |
| நேராய்நடந்து மன்னன்முன் | ஒய் | யஜால |
| கோடிசந்திரன் பிரகாசம்போல் | குளிர்ந்த | ரியாள் |
| ஆட்டிகைக ணிட்டிப்பணி | | பூட்டிமாணியாள் |

(சுயம்புவல்லி வசனம்.) ஆ! இவனாரடா அவதூதா? இதுதானா நீ காவல் செய்யுந் திறமை? தெரிந்தது.

(அவ - வ.) ஐயையோ! என்செய்வேன் என்செய்வேன், ஆக்கினையிடுவாளே? அடே சண்டாளா? எனக்கு எமனாய் எங்கிருந்து வந்தாயடா பாவி? அப்பவே ஓடிப்போடா என்றேனே, அரசி கண்டு கொண்டாளே, என்னசெய்வேனடா பரமசண்டாளா?

(சங்-வ.) ஆ! இவள் ஆர்? தெய்வ கன்னிகையா? நாக கன்னிகையா? வன தேவதையா? ராஜகன்னியா? அந்த ஊர்வசி என்பவளோ? மதன் பெண்டெனும் ரதியா? ஆ! என்ன ரூபம்! என்ன வடிவு! என்ன ஒயிலு! இவள் இரு கொம்மைகளின்

வடிவைக்காணப் பதினாயிரங் கண்கள் வேண்டுமே, இவளை எப்படியாகிலும் அடையவேண்டும். அப்படிக்காகாவிட்டால் இங்ஙனே இவள் இருபாதத்தருகில் நமது பிராணனைப் போக்கவேண்டியதே நாம் கொண்ட ஆசைக்கு அந்தியம் அன்றி வேறில்லை. அடா மதனா! ஏனப்பா என்பேரில் கணை தொடுக்கின்றாய், நான் உன் பகையாளியா? பொறு, பொறு.

---

(சங்-ஜா.) இரா-பியாக், தாளம்-ஆதி.

இந்தமோகஞ்சகிக்கப் போகுமோதானே
இவளைவிட்டுமப்பால் போவேனோநானே.
கந்தமாமதன்விடுங் கணையால்நோகுதேயுளம்
காமினீ கேமினீ
சாமினீ வாடிஓ (இந்த)
சொகுசாய்நடைநடித்து சூட்டுகிறாய்காமம்
சுந்தரி ஸுந்தரி
வந்தவ தாரிஓ (இந்த)
பாவமதடைந்திடும் பாரொன்னைவெறுத்தால்
பாதகி தோதகி
காதக சாதகிஓ (இந்த)

ஆ! இவள் என்ன நம்மை வெறுப்பாய்க் கோபக்
குறி ...க்கின்றாள்? நாமே வலிய அவள்முன் சென்று
வண ...படுத்தி, கூடி, சுகிக்கவேண்டும். இதற்குமுன்
அந்த ...பாகமும் ஒரு பெரிதல்ல. நமது இஷ்ட தெய்வந்
தான் து... அந்த அப்சர ஸ்திரியாகிய ஊர்வசி அதிரூபவதி
என்றும், நமது வம்ச ஆதிபுருஷனாகிய புரூரவராஜன் அவளாற்
கேந்தியாபின்னன் என்றும் கேள்விப்பட்டிருக்கின்றோம் அல்லவா?
அந்த ஊர்வசியும் இப்படிக்கு இருந்திராள். அல்லது அவளே
இவளாய் இருக்கவேண்டும். நாம் எதிர்கொள்வோம், வந்தனம்,
வெகு வந்தனம், பிரீதி வந்தனம், மாதரசே!

---

(சங்-க.) இரா-செஞ்சுருட்டி, தாளம்-ரூபகம்.

ஏழைநானே தயைசெய்ய யிரங்குவாய் நீயே
இந்தொகரங்கூப்பி நின்றேனேவந்திடுவாயே
ஆரிழைத்தநலமோயிங்கு அடையலானனே
அடிமைஐயோயெனக்குவந் தருள்செய்வாய்மானே



பொற்கிண்ணம்போல்தோணுதிதோ பூவேயுன்னம்மம்
போற்றிசெய்தேன்தீண்டமனம் பொறுப்பைவந்தனம்
மாரனென்மேல்வாளிதூவி மயக்கினான்கோதே
மன்னித்தெந்தன்பிழைகளிப்போ மருவுவாய்மாதே.

---

(சுய-க.) இரா-குறிஞ்சி, தாளம் - ரூபகம், திசரம்.

ஆரடா நரனே நீ யச்சமின்றியே
அடுக்காமொழியாடவிங்கு யமைந்து நின்றையே
தேவரும்மூவருந் தெரிசிக்க அஞ்சி
திகைப்பரோ நீவந்தாய் திரண்மையேமிஞ்சி
அடபேயே நீயென்முன் அனங்கனால்வாடி
ஆடுகிறாய்வெறியனாய் அகலுவாயோடி
சீ நாயேவாய்மூடு செபித்திடுவேனே
சீரற்றசவம்போல செய்குவேனானே.

(சுய-வ.) துன்பம் பிணி மூப்பு சாக்காட்டிற் குடல்... நரனே! வாயை மூடுவாய் சீசீ!

(இங்-சேர்-வ.) அம்மா ஊர்வசி! ஏன் இன்..... இந்திரன் சீக்கிரம் வரச்சொன்னார் வருவாய்.

(ஊர் - வ.) இதோ நான் உடுத்திக்கொண்டு வரு...றேன். எனக்கின்று கொஞ்சந் தேக அசவுக்கியமென வேந்தனுக்கு அறிவித்து, சேர்வையே! காலதாமச மானதினாற் பொறுக்கக் கோரினதாயுந் தெரிவிப்பாய் அப்பா.

(சேர்-வ.) அப்படியே.

(ஊர்-வ.) அப்பா நல்ல பூதனே! நான் இந்திரன் சபைக்குப் போகவேண்டும், விமானத்தைக்கொண்டு வருவாய்.

(பூத-வ.) இதோ கொண்டுவந்தேன் அம்மணி.

---

ஊர்வசி கன்னி. இரா - காபி, ஏகதாளம்.

நேரஞ்சென்று வந்தாயென நினைத்தேயிந்திரன்
கோரமென்ன செய்விப்பனோ கோரித்தந்திரன்.

(ஊர்-வ.) ஆ! இதென்ன, இன்று இவ்வேளையில் அந்த மோகினிவனத்தின் மேடைமீது யாரோ ஒரு சுந்தரபுருடன் சயனித்திருக்கிறார்; நாம் விமானம்விட்டு இரங்கி அவரைப்பார்த்துப் போவோம். ஆ ஆ! இவர் ஆர், இங்கு தனியே இவ்வுல்லாச மேடையின்மீது சயனித்து இருக்கிறார்? இவர் முகக்காந்தி நித்திரையிலேயே ஒளிவீசுகின்றது. மதனா? இந்திரனா? மதனானால், மேனி வலுத்துக்காட்டுமே; இந்திரனானால், ஆயிரங்கண்கள் விளங்குமே; அல்ல. சுப்பிரமணியனா? முருகனானால், ஆறுமுகம் இருக்கவேண்டுமே; அல்ல. மாயனா? மாயனானால், பச்சைமேனியாய் இருக்கவேண்டுமே; அல்ல. இவர் யாரோ, நல்லது இவர் கையில் இருக்கும் முத்திரை மோதிரத்தை பார்ப்போம். சந்தனமகாராசன். இவர் மேனியெல்லாம் சந்தனவாடை வீசுகின்றது; பேருக்குத்தகுந்த பிரியன்; நாம் இவரோடு கூடிச் சுகத்தை அனுபவிக்காமல் போகப்போகாது. ஆ! நித்திரையில் இருக்கிறாரே, நித்திரையில் இருப்பவரை எழுப்புவது தோஷமல்லவா? காமிகட்கு தோஷ நிவாரணம் என மதனநூல்பேசுகின்றதே; எழுப்புவோம். சாமீ! அடா சாமீ! எழுந்திருக்கவில்லையே, துரையே! இவ்வளவு அசதியான நித்திரை கொள்ளப்போமா வனமாச்சே! மிருகத்துன்பம் நேரிடுமே! ஓ ஓ! சரி, உ வருவாள் என்று நினைத்துக்கொண்டீரோ? இதோ வந்தேன் ம்திரும். நீர் இங்கிருப்பது நான் எப்படி அறிவேன்? என் அனுப்பவில்லை? தூதன் இல்லையோ? சரி, தனியாய் மோகனாங்கா! காமங் கரைபுரளுதே! கன்னியுட தே? கடினசித்தங் காட்டுவது அடாது. தையல் வருந் ஷம் விடாது. அடா சாமீ! இனி சகிக்கேன், விதியே! எ ன இக்கெதியில் விட்டாயா? ஆ! இவனா? இவனுக்கென்ன ஆத்திரம்? சீ சீ காமா! பொறு. உன் மதத்தையொடுக்க என் துரைசிங்கம் எழுந்திருக்கின்றது பார். சுவாமீ! இன்னம் என்னநித்திரையா? அடியாள் படுந்துயரை நீக்கக்கூடாதென வர்மமா? அல்லது, அடமா? துரையே! நான் முன்னமே ஓடிவரவில்லையெனக் கோபமா? ஒரு பதமாகிலும் பாடட்டுமா? செவி கொடுத்தாகிலுங் கேட்பாயா? பாடுவோம். இவர் தலையினிடங் குந்திப்பாடுவோம். அப்படியும் விழிக்காவிடில், அப்பால் வேறு யோசனை செய்வோம்.

---

ஊர்வசி-ஜா. இராகம் - செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

என்னுடன் நீ பேசாதது நியாயமோ
இத்தனைகோப மேற்குமொடாசாமி (என்)



தானாய்வந்திதோ தவிக்கிறேன்காமியா
தயவிலாதிருப்பது தர்ம்மமல்லடாசாமி (என்)

சுந்தரரூபனே சொகுசுளமாரனே
சோருதே ஆவியும் சொக்கினேனடாசாமி (என்)

இன்னமுந்தூக்கமோ இதுவுந்தன்ஜாலமோ
இத்தனைமோடியா இருப்பதென்னடாசாமி (என்)

பத்தரைமாற்றுள்ள பசும்பொன்னுன்மேனி
பாடியும் வேடியும் பாவியானேனடாசாமி (என்)

காமியாய்வந்துவுந்தன் கால்அடிபோற்றினேன்
கண்ணதைமூடியே காட்டலென்னடா சாமி (என்)

(ஊர்-வ.) ஆ என் நாயகா! பேசாயா? இதுவுமொரு லீலையா? நல்லது மனதே! இங்கு ஏன் கலங்குவது? நமது இருப்பிடஞ்சென்று, பூதத்தையேவி எடுத்துவரச்செய்து, நமதெண்ணத்தை முடித்துக்கொள்வோம். இதுதான் சரியான யோசனை. அதற்குள் இவர் எழுந்தால் போய்விடுவாரே, இதற்கு எப்படி? அப்படி போகாதிருக்க ஒரு ஏற்பாடு செய்துவைக்கவேண்டும். என்ன செய்யலாம்? வேறொன்றுஞ் செய்யப்போகாது. அவர் கணையாழியைமாற்றி, நமது கணையாழியைப் பூட்டிப்போவோம். எழுந்தால், கணையாழியைப் பார்ப்பார். பார்த் கத்து யோசிப்பார். அதற்குள் பூதத்தை ஏவுவோம். ய சரி. அப்பா நல்லபூதனே!

(பூத-வ.) அபசாரம், ஆக்கினை இடுவாய் அம்மணி.

(ஊர்-வ.) எனக்கு ஒரு உபகாரஞ் செய்வாயா?

(பூத-வ.) இட்சணமே சொல்லுவாய் தாயே.

---

ஊர்வசி-கண்ணி. இரா-குல்ரோஜ், தாளம்-ரூபகம்.

ஆரண்யத்தே ஓரரசன் நித்திரைசெய்யவே
அடியாள்கண்டு காமமீறி யழுதேனையவே (ஆர)

கத்திகத்தி யழுதுமவர் கருதவில்லையே
கணையாழியைமாற்றிவந்தேன் கண்டுகொள்ளேயே (ஆர)

மோகினியாள்சோலையண்டை மேடைகாணுவாய்
மெள்ளச்சென்று அசையாமல் தாங்கிப்பூணுவாய் (ஆர)

உன்னடிமையாவேனிது உண்மையெண்ணுவாய்
உயிர்நிலைக்கும் அவனைக்கண்டால் உதவிபண்ணுவாய். (ஆர)

(பூத-வ.) இதோ அரைவிநாடிக்குள் கொண்டு ஓடி வருகின்றேன், விசனம்வேண்டாம் அம்மணி.

(பூத-வ.) இதுதான் மோகினிவனம், மேடை எங்கே? இதுதான் மேடை. இதோ ஊர்வசி மாப்பிள்ளை தூக்கத்திலிருக்கிறான். ஆ! ஆ! இவன் அழகே அழகு, இவன் காந்தி எந்த தேவர்கட்கும் இல்லை. ஆனதனால்தான் ஊர்வசி வலியமோகமானாள். அடா நரனே! நீ ஏன் இங்கு வந்தையோ பாவி! ஊர்வசி கையில் சிக்கவா வந்தனை; அவள் மகா காமியாச்சுதே; இரவும் பகலும் உன்னை ஆட்டி உடல் வலுமையை ஓட்டிவிடுவாளே; நான் என்னசெய்வது? மெத்தென எடுத்துவரச் சொன்னாளே, அப்படியே தாங்கிச் செல்வேன்; இல்லாவிடில் தெண்டிப்பாள்; இவன் மெத்த நித்திரையில் இருக்கிறான்; எடுத்து ஏகுவோம்.

---

பூதன் கண்ணி. இரா-குல்ரோஜ், தாளம்-ரூபகம்.

ஆநீசொன்னவாறுசென்று அரசன்தன்னையே
அசை…மலெடுத்துவந்தேன் அணைவாயன்னையே. (ஆயி)

.) ஆ! எங்கு என்னாயகனைப் பார்ப்பேன்.
இதோ பார், தாயே.

---

ஊர்வசி ஜாவளி. இரா-அபுரூபம், தாளம்-ரூபகம்.

இவராமே எந்தன்துரை இவரொன்காமியாம்
இவரெந்தன் மதனாகும் இவர்க்கடிமை நான் (இவ)

ஆரண்யத்தில் உன்னைக்கண்டு ஆவலாகநான்
அழுதுநின்றும் கண்கள்மூடி அபினயித்ததேன் (இவ)

இந்தநித்திரை ஏற்குமோடா எழுந்திராமற்றான்
இங்குஎன்னைக் கூடிச்சேர இதுசமயந்தான் (இவ)

மாதழுதுவாடக்கண்டு மார்மமேனோதான்
மதனரூபாமயலாகுது மருவவாரும்தான். (இவ)

(ஊ-வ.) ஆ என்சாமி! இன்னந் தூக்கமா சந்தோஷம் இவ்வளவு அசதியான நித்திரை எதனால் இருக்கும் யோசிப்போம்.



சரி, என் துரைக்கு மோகினிவாடை தாக்கியிருப்பதாய்க் காட்டுகின்றது. அப்படிக்கு இல்லாவிடில், என் கானத்தைக் கேட்டபோதே எழுந்திருந்திருப்பார். நல்லது, ஐயா பூதனே! இவருடைய மோகினிசொக்கிய இந்த தூக்கம் நீங்க மயக்கந்தீர்க்கும் பனிநீரில் இத்திவ்ய தேவதா சந்தனாதியை கலக்கி, மேலே நின்று சிறிய பனித்துளிகள்போலத் தூவித் தெளிப்பாயா?

(பூத-வ.) அப்படியே அம்மணி.

(ஊர்-வ.) ஐயா பூதனே! பத்திரம், ஜாக்கிரதை ஜாக்கிரதை, பெருந்துளியாய் விடப்போகாது, என் நாயகனுடைய தேகம் நோவெடுக்கும், பத்திரம்.

---

சந்தனராஜன்-கண்ணி. இரா-குல்ரோஜ், தாளம்-ரூபகம்.

எங்கிருந்தோம் இங்குவந்த தெப்படிநாமே
எதிரினின்றமார்தைக்காணேன் என்னமாயமே

சோலையெங்கே மேடையெங்கே சுரமுங்காணனே
சுந்தரமாயிம்மாடிபடந் சூழக்கண்டேனே

என்னமாயம் எவரின்சூதோ எதுவுந்தோணலே
ஏங்குதுள்ளம் அமச்சனுடன் எவருங்காணோ-

---

ஊர் - கண்ணி. இரா - கமாஸ், தாளம்-ரூபகம்.

கண்டேன்காந்தியே கதி நீயேதானடா கந்தா
கடிகினில்வாயென் னிடம்ஓடி கட்டியணைப்பேனிந்தா

ஆரண்யத்தில் உன்னைக்கண்டு ஆசைகொண்டேன்அடா சதி
அருகினில்வா வுன்னைக்கட்டி யணைகுவேநீயே பதி

காமமீறிப்பலவாறாய் கத்திஅழுதேன்அடா அங்கு
கண்திறக்காததனால்வா வழைத்தேன்அறிவாயிங்கு

எழுந்துநீபோகாமல்அங்கே இருக்கக்கணையாழிபூட்டி [டி
எண்ணாதெல்லாம்யெண்ணிவந்தேன் எனைத்தொடுவாய்கைநீட்

கரைபெருகிகாமவெள்ளங் கதிதப்பிப்பாயுதே
கலந்தணைவாஇந்திரபோகங் காட்டுவேனடாயிப்போதே.

---

இரா-கமாஸ், தாளம் - ரூபகம்.

(ச-க.) ஆருநீயுன்பேரதென்ன அறியச்சொல்லுவாய்கோதே
ஆச்சரியம் நீ இறகு அடைந்திருப்பதும்மாதே

(ஊ-க.) இந்திரனிடசபைநடிக்கும் என்பேருர்வசியடாசாமி
இவ்விறகுமேற்பறக்க இயன்றதறிநான்காமி

(ச-க.) புரூரவனோடு நீ கலந்தையென புகலவுங்காதைகண்டேன்
போற்றிசெய்தேனுண்மையதோ புகலுவாய்யிங்ஙனம்விண்டே

(ஊ-க.) சாமியதுவுண்மையடா சக்கிரவர்த்திதானும்
சங்கடமிகவடைந்தார் சகியாமற்பிரியனும்

(ச-க.) என்னையுநீ அவ்விதமா ஏய்க்கிலென்செய்வனடி
இருக்குமோவுயிர்போகாம லிதர்க்குரைப்பாய்நீயடி

(ஊ-க.) ஆவியுள்ள மட்டுமுனை அகன்றிருக்கேனடா தேவி
அவருக்கொருசாபமுண்டு அறைவேன்கூடுவாய்தாவி

(சங்-வ.) அப்படியானால் சரிதான் அடி என் கிளியே!

ர்-வ.) ஆ! என் ஆசைக்குகந்த ஆண்கிளியே! உன்னை
ந்தவுங் திருஷ்டித்துப்பார்த்தேன், திருஷ்டிப்பட்டிருக்
ஞ்சத்திரு, திருஷ்டிகழிப்பேன், அடா என்சாமி!

வுப்படியே.

அடி சகியே! ஆலங்கொண்டு வருவாய்.

( ), இதோ கொண்டுவந்தேன் அம்மணி.

(ஊ-வ.) என்முகமாய்த் திரும்படா சாமி, துரையே! இந்த சிற்றுண்டியை அருந்தி கலவைச்சாந்தணிந்து, என்னுடன் கூடுவாய் அடா என் கனிரசமே!

---

ஊர்வசி ஜாவளி, இரா-செஞ்சுருட்டு, தாளம்-ரூபகம்.

சமயமிதுவே சரசமாடவாராய்.
வாராய் அதிதீரா
கட்டிச்சேராய் சுகந்தாராய். (சமய)
ஆசையில்லா நாயகனே அறையடா நீ சாமி
சாமி நானேகாமி
மனம்நேமி குணநாமி. (சமய)



காமமீறி மனமிரண்டு களைக்குதேவுடல் நாதா
நாதா சுகந் தாதா வினை
தீதா இன்னம் வாதா. (சமய)
சங்கையின்றி ஸ்தனநெருடி சாமி எந்தனைக் கூடாய்
கூடாய் மனம் நாடாய் அன்றிற்
பேடாய் முத்தந்தாடா. (சமய)

(சங்-வ.) நல்லதடி பெண்மயிலே.

(ஊர்-வ.) அருகினில் வா என் ஆண்குயிலே.

(இங்-வ.) இன்னம் ஏன் ஊர்வசியைக் காணோம்?

(மங்-வ.) சேர்வையே!

(சேர்-வ.) சுவாமி.

(மங்-வ.) ஊர்வசியை அழைத்து வந்தாயா?

(சேர்-வ.) கொஞ்சம் சலியென்றும் உடுத்திக்கொண்டு வருவதாகச் சொன்னாள் சுவாமி.

(மங்-வ.) இப்போது அரசர் மறுபடி கவனித்ததாய் வுறிவித்து அழைத்தோடி வருவா.

(சேர்-வ.) நல்லது சுவாமி. அம்மா ஊர்வசி! இந்திரன் அழைக்கிறார், வருவாய் அம்மணி.

(ஊர்-வ.) இதோ வந்தேனடா சேர்வையே. என் ஆசைக்குகந்த சாமீ! அடியாள் இந்திரன் சபைக்குப்போய் சீக்கிரத்தில் ஓடி வருகின்றேன், உத்திரவா துரையே?

(சங்-வ.) மாதே! அங்கிருந்த என்னை இங்கு எடுத்துவந்து, அறியாதவிடத்தில் ஒண்டியாய் விட்டு, நீ இந்திரனிடம் போவது சரியா? அங்கு போனவள் இங்கு மறிபடியும் வருவதுண்டா? இதென்ன தீமையடி?

(ஊர்-வ.) ஆ ஆ என்நாயகா! என் உடல் அங்கும் உயிர் இங்குமாயிருந்து, கொஞ்சம்போது சபை களிக்க நடித்து, இங்கு ஓட்டமும் நடையுமாய் வருவேன், வாக்களிப்பாயடா மதனே! இதோ ஆசை முத்தமிட்டேனடா என்சாமி.

(சங்-வ.) தலையைத்தொட்டு ஆணையிடினுந் தையலார்மொழியை நம்பலாகாதே கோதே! பெண்ணே! இந்திரபுரத்தில் இந்திரனுடைய சபையையும், அங்கிருக்கும் விநோதங்களையும்

அதிமேன்மையாய்ப் புராணுதிகள் பேசுவதனுல், நானும் வருகி றேன், என்னையும் அழைத்துச் செல்லுவாய், அடி காமக்கிளியே! என் கட்டியமுதே!

(ஊர்-வ.) நாதா! அதுவோ தேவசபை, நாசாள் வரப்போ ன்றதன்று, வரினும் சபைக்காவலன் அறிந்தால் கொடிய ஆக் கினை சித்திக்கும், நானும் தண்டனைக் குள்ளாவேன், வேண் டாம், இங்கிருப்பாய் அடா என் கட்டிக்கரும்பே! கருணையுள்ள சாமி!

(சங்-வ.) ஆ நாயகி! அங்கு வரப்போகாதென்று என்னை நீ பய முறுத்துவதைப் பார்த்தால் மறுபடியும் என்னிடம் வரமாட் டாய் என்று காட்டுகின்றது. நானைக்குப்போ, இன்று என்னைச் சூழ்ந்த காமவிகாரத்தை நீக்குவாய் அடி பிரியவதனு!

(ஊர்-வ.) ஐயையோ! நான் என்ன செய்வேன்? என்னே டொத்த மூவரும் அங்கு வந்திருக்க, நான்போகாவிடில் இந்தி ரன் சாபமிடுவானே, என்ன செய்வேன்? வாக்களிப்பாய் நாதா! உனது உபயபாதங்களை இதோ பணிகிறேன், பர்த்தாவே!

(சங்-வ.) மாதே! ஒப்பேன், ஒப்பேன். அங்கு இருக்கும் மற்ற மூவரையும் நான் அவசியம் பார்க்கவேண்டும். என்னை யழை [illegible] ச் செல்வாய், அடி அமிர்தக்கிளியே!

( [illegible] ஐயோ துரையே! அம்மூவரின் அழகு என்னு டைய [illegible] அங்குஷ்டத்திற்கு இணையாகுமா? வேண்டு மாயின் [illegible] னை இங்கே வரவழைத்துக் காட்டுகின்றேன், விடைத [illegible], என் விவேகமுள்ள துரையே! என் துரைசிங்க மே! என் துரைசாமியே!

---

ஊர்வசி-ஜாவளி, இரா-தரஜோலி, தாளம்-சாப்பு.

கேள்கேளடாசாமி என்வார்த்தையை
கேளடாசாமி.

ஆர்செய்ததவமோ அகப்பட்டாய் என்கை
அடியாளின்வார்த்தை தட்டாதே
அடமினிசெய்வது ஆகாது ஆகாது
அபாயம் அபாயம் வந்திடுமினி அறி
அட அட சாமி. (கேள்)

பிடிவாதம்செய்வது பெரிதல்ல நாதா
பேணுவேன் உன்பாதம் நானே



அடிக்கடிக்கென்னை வருந்திடலாகா
அபாயம் அபாயம்
அபாயம் வந்திடுமெங்கு அறி
அட அட சாமி. (கேள்)

(சங்-வ.) பெண்ணே! இதெல்லாம் வீண்வார்த்தை, உனக்கு முன்னிருந்த ஆசையும் அன்பும் இப்போதில்லை, தெரிந்துகொ ண்டேன். சரிதான் நீ போ. இதோ என் உயிரை உன்னுடைய வாளால் போக்கிக்கொள்ளுகிறேன்.

(ஊர்-வ.) ஆ அ! என்சாமி! இதென்ன காரியம்? என் வா யில் நடுத்தெரு மண்ணைப்போடவா எண்ணங்கொண்டீர்? வரு வது வழிதங்காது. அப்படியே அழைத்துச் செல்கின்றேன். தயவுசெய்து மஞ்சத்திரும். தேவவிமானத்தை வரவழைக்கி றேன், என் கண்ணாளா!

(சங்-வ.) அப்படிச்செய்யடி, என் கிண்ணே!

(ஊர்-வ.) ஆ விதியே! நான் என்னசெய்வேன்! என் நாய கனை எப்படி இந்திரன் சபைக்கு அழைத்துச் செல்லுவேன்? விமானத்தில் ஏற்றிச் சென்றாலோ, கணங்கள் எடுக்கார்களோ? இதற்கு எப்படி? அவரை அழைத்தேகுவதாய் வாக்களித் [illegible] விட் டேன், விசனப்படப்போகாது, யோசிக்கலாம். அப்பு, [illegible] ல்ல, அவரை ஒரு பூமாலையைப்போல் நமது மந்திரபலத்தால் செய்து நமது இரு பயோதரங்களின்மேல் புராணும்படி தரித்து, விமா னமேறி இந்திரபுரமடைந்து, அவரை எப்போதும்போல உரு வாக்கி, ஒரு மரத்தடியில் இருத்தி, நாம் கொஞ்சநேரம் நாட்டியம் செய்து, உடனே அவரை முன்போலவே பூமாலையாக்கி இங்கு அணிந்துவருவோம். இதுவே சரி. அப்பா பூதனே! நான் இந் திரன் சபைக்குப் போகவேண்டும், விமானம் வரச்செய்வாய்.

(பூத-வ.) அப்படியே இதோ விமானம் வந்தது, அம்மணி!

(ஊர்-வ.) துரையே! நீர் என்னைப்பாராமல் கொஞ்சநேரம் இருகண்களையும் இறுக மூடிக்கொள், அடா என் காமரசமே! கதலிக்கனியே!

(சங்-வ.) இதோ மூடிக்கொண்டேன், அடி என் கண்மணி யே!

---

பொது - கண்ணி.

காமியாய்ஊர்வசி கணவனைக்கூட்டியே
கருதிவாராளோடி இந்திரன் கூத்தை நாட்டியே

பச்சைவடம் முத்துமணி பவழம்பூட்டியே
பதுங்கஇடம் ஆளனுக்கு பணிந்துகாட்டியே.

(ஊர்-வ.) ஆ என் ஆசை நாயகா! இதோபார், இந்திரபுரம் வந்தோம். நீர் இந்த சுகந்த ஆத்திமரத்தினிடம் ஒருவரும் காணாதபடிக்கு இருப்பீர், நான் சற்றுநேரம் நடித்து வருகின்றேன், அடா என் துரையே!

(சங்-வ.) மாதே! உன் தயவினால் என் மூதாதைகளும் காணுதற் கரிதாகிய இந்திரன் சபையைக் கண்டேன். மெத்தவும் ஆனந்தங் கொண்டேன். உன் நாட்டியத்தையும் இந்திரனையும் அங்கிருக்கப்பட்டவர்களையும் பார்க்கும்படி கிருபை செய்வாய். உனக் கிதோ வந்தனம், பெண்ணே!

(ஊர்-வ.) ஆ பிராண நாதா! எனக்கு வந்தனம் செய்வது அழகா? நான் உமக்குப் பணிப்பெண், வருவது வந்தே தீரும். ஆனால் இங்கு இருந்தபடியே, இந்த மரப்பொந்தின் வழியாக என் நடன முதலானதும் பார்ப்பீர், நாயகா! நான் சபைக்குப் போகட்டுமா?

வ.) போய் வருவாயடி மயிலே!

ர்-வ.) போற்றி போற்றி இந்திர ராஜே!

(இந்-வ.) அடி பெண்ணே ஊர்வசீ! என்னை இத்தனைநேரம் விகாரவலையில் அகப்பட்டு அலறச்செய்ய எத்தனை நாளாய் கவனமிட்டிருந்தாய்?

(ஊர்-வ.) அரசே! நான் நேற்றையதினம் மெத்தவும் பாடி அலுத்தமையால் இன்று வர கொஞ்சம் பொழுதாயிற்று, இன்னம் எனக்கு நித்திரை சோகம் தீரவில்லை, தங்கள் ஆக்கினைக் கடவாமல் வரலாயினேன், மன்னிப்பீர் அரசே!

(இந் - வ.) மானே! என்னை களிக்கச்செய்ய இன்னமுந் தடையா?

(ஊர்-வ.) இதோ, என் ஆண்டவனே!

---

ஊர்வசி தில்லானு. தா-ஆதி.

தாதிதாதி தாதிதந்திரதாதி தகதிக தந்திர
தத்திமிதிமிதிமி தருந்தரிகுருந்திரி
தகதிக தகுந்தரி திமிதொந்திரதாதி - தாதி.



கோரினேனிவ்வேளை கூடிடுவாயே குமரகுருபரனே
கொம்மையும்தேடுது கூடவுநாடுது
குகமசிவவென்றுங் கோபமோவாராய்
ஏனோ யிந்த மோடியதாமோ
எளியனே வாதிடலாகுமோ தான்
மனதினிலுடியுன் மலரடிதனை
தரவே தநியிதே வா வா பதியெனவே
சநிதப மகமபதம தபதம பமபகம பதச
நிகமகரி சநிதபமகமபதநி சச பப சசகமபதநி - தா.

1172

---

ஊர்வசி ஜாவளி, இரா-செஞ்சுருட்டி, தாளம்-ஏகதாளம்.

ஆகினேன்நான்மோகத்தால் என் அரசேவாடவும்
அடமோயினியென்னைச்சேரா தழகோ இன்னமும் ஆ
காமிமனம்வேறொன்றிற் களிக்குமோதேசே
கட்டியெனை முத்தமிடும் கனைதான்கீங்க ஆ
மோகமாகச்சந்தனத்தை முகந்தேதக்கோரி
மோசம்வரில் ஏதுசெய்வேன் முறைதான்காரி ஆ

(இ-வ.) மாதே! இன்னும் ஒருபதம் பாடுவாயா?

(ஊர் - வ.) அப்படியே.

---

ஊர்வசி ஜாவளி, இரா-காபி, தாளம்-ஏகதாளம்.

ராஜேஸ்திரி ராஜ ராஜனே என் ரசிகாசந்தனம்
ரமிக்க இது காலம்காணும் ராஜே வந்தனம்
தானுகிவந்தும் தாள்பணிந்தும் தயவைக்காணேனே
தருமமன்று கோபம்விடும் தருணம் ஆளனே
நான் ஏங்கிவசடவிடுத்தையே விரகத்தால்விம்மியே
நாயமாமோ பாவம்சுற்றும் நாளும்தும்பியே
காமிகளை வருத்தும்குணம் கடினம்காண் நாதா
கட்டியொருமுத்தமிடும் காதலாய்தாதா
மோகத்தாலே வந்தேன்என்றே மோடிகாட்டுறாய்
மோசம்வரில் ஆவிநீங்க - முடியும்நீயாராய்

பெண்ணாய்ப்பிறந்ததோஷத்தாலே பிதத்தல்நாதனே
பிடிவாதம் விடும் விடும் பிரியாப்போதனே.

(அக்கினியோத்திரன் வசனம்.) ஆ ஆ அரசே! நரவாடை வீசுகின்றதே, வீசுகின்றதே!!

---

ஊர்வசி.

கொஞ்சம்போதில்வந்துவுன்னை கூடுவேன்காமி
கோபம்செய்யப்போகா திதோ கும்பிட்டேன்சாமி.

(அக்-வ.) அரசே! அரசே! ஆ அரசே! இங்கு நரவாடை வீசுகின்றது.

(இந்-வ.) என்ன விசேஷம் அடா அக்கினியோத்திரா?

(அக்-வ.) அரசே! இங்கு நரன் வந்திருக்கின்றான்.

(இந்-வ.) அப்படியா, இங்கு எப்படி நரன்வருவான்? தேடிப்பிடித்து இழுத்துவருவாய், சீக்கிரம்.

(அக்-வ.) இதோ கொண்டுவருகிறேன் அரசே!

---

ஊர் - ஜா. இரா-குறிஞ்சி, தாளம்-அடதாளம்.

அக்கினியோத்ரா நீஇங்ஙனம்பார்
அறியாததொன்றில்லை அகத்தினில்தேர்
இதாமேவேளை நீ என் மானங்கார்
இதைநான்மறந்திடேன் என்றதாய்ப்பார்
கோளுரைசெய்வது குணமில்லைநான்
கோதையின் நாயகன் கும்பிட்டேன் நான்
விதியாலே அவரிங்கு மேவினர்காண்
வேறேதுவாராமல் வேண்டினேன் நான்.

(அக் - வ.) ஆ ஆரடா நரனே! நீ இங்கு எப்படி வந்தனை? விழிகிழிந்தது வாவா நடநட.

---

சங்-ஜா. இரா - நா-குறிஞ்சி, தாளம்-அடதாளம்.

அனுதினான்தேவே அருள்செய்வாய் இன்று
அடிமைநான் ஆகுவேன் அறிகுவாய் நன்று - அ.

தாயார்தந்தைமற்றும் தமயனும் நீதான்
தயவுசெய்யில் வுந்தன் தாள்பணிவேன் நான் - அ.



பாதாரவிந்தத்தைப் பற்றினேனானே
பாவம்என்னைக்கொன்றால் பழியாகுந்தானே - அ.

(அக்-வ.) நட பயலே நட, இந்திரபோகம் அனுபவிக்கவா வந்தனை? வா வா. இதோ நரனைக் கொண்டுவந்தேன் அரசே!

---

சங்-கண்ணி. இரா-மோகனம், தாளம்-சாப்பு.

எதிர்க்காலுளிக்காமொழியுளோன் யான்
ஏழையுன்திருவடி யேற்றுவோன் தான்
விதிவசத்தாலிங்குவரலாயினேன் நான்
வேறேதுமறிகிலேன் விளம்புவேன் யான்
குடிகளின்முறைகேட்டு வில்லேந்தி நான்
கோவேவேட்டையாட கோரினேன் தான்
வனஞ்சென்றுவல்லியால் வாடினேன் நான்
வஞ்சியிவ்வூர்வசி வனத்தினில் தான்
இருந்தவாறறிகிலேன் யெந்தையே நான்
இங்குற்றேன்வும்மைக்காண யேற்றுவீர் தான்.

---

சங்-கண்ணி. இரா-காபி, தாளம்-ஆதி.

போற்றி போற்றி போற்றி இந்திரபூசுரதேவே
புலையனுன் செய்தபிழை பொறுத்திடும் கோவே.

கண்ணி. இரா-காபி தா-ஆதி.

(இந்)எங்கிருப்ப துந்தனுடு இங்கு ஏன் வந்தாய்
இயம்பிடில் பொய் உயிர்நீங்கும் எண்ணுவாய் கந்தா
(சங்) அஸ்திநாவிற்கரசனாலும் அறிகுவீர்நாதா
அடைந்தேன் இங்கு ஊர்வசியால் அடியேன்தொழும்பாதா

(இந் - வ.) அப்படியா! என் சபையை நரன் பார்க்கப்போமா? அவளோ வேசி, அவள் அழைத்தாலும் நீ வருவது அடுக்குமா? நல்லது, அடா அக்கினியோத்திரா! இவன் கொஞ்சமேனும் நெஞ்சம் அஞ்சாமல் நமது சபைக்குவந்து, நான் இருக்கும் உல்லாசத்தையும் வினோதங்களையும் பார்த்தமையால், இவனை பாதாள கெவியில் அடைத்து பாராங்கல்லே மூடிவிடடா.

(அக்-வ.) மெத்த சந்தோஷம், அப்படியே செய்கின்றேன் அரசே! அடே நட நட, இந்திரபோகம் இதோ அனுபவிக்கப் போகிறாய், உன் புண்ணியமே புண்ணியம் அடா நரனே.

---

சங். கன்னி. இரா - நாதநாமக்கிரியை, தாளம் - திரிபுடை.

உன்னைநான்பிரிந்துமிங்கு வுயிரிருந்தப்போமோமானே
என்னென்னமோவெண்ணிமனம் ஏங்கலானேன்மாங்குயிலே
அன்னம்போலவென்முன்பேசி ஆசையெனும்வலைவீசி
சொன்னசொல்லைக்கேளாஇந்த சோகமுறலானேன்நானே
வேண்டாமெனநீயெனக்கு விளங்கச்செப்பியவுனக்கு
தாண்டாதுரைத்ததோஷத்தால் தவிக்கலானேனடிதேனே
என்றினிநான்வுன்னைக்காண்பேன் எனறுதேயம்போக்கலாவேன்
அன்றெழுதிஅயன்விட்ட அரும்விதியோகருமிநானே.

(இங்-வ.) அடி மாதே ஊர்வசி! நீ செய்தகாரியம் சரிதானா? நரை திரை மூப்புக்கு ஏதுவாகிய நரன்மேல் ஆசைகொண்டு கூடி அனுபவித்ததுந்தவிர, சற்றேனும் அஞ்சாமல் என்சபைக்கும் அவனை அழைத்துவந்தனை. தேவர்கட்கும் காணுதற்கு அரிதாகிய என் சபையை அவனா பார்க்கதக்கவன்? என்னடி கிர்மூடி!

(இங்-வ.) மந்திரி!

(மங்-வ.) சுவாமி!

(இங் - வ.) நான் என்னசெய்வேன்? ஊர்வசியை நானே தண்டனை விதிக்கும் காலம் வந்ததே! ஆ! ஆ! என்னசெய்வேன்!

(மங்-வ.) அரசே! அநேக யாகாதிகள்செய்து ஏகபத்தினி விரதனாய் இருப்பவரும் காண அரிதாகிய சபைக்கு நரனை அழைத்துவந்த குற்றம் மன்னிக்கத் தக்கதன்று. ஊர்வசிக்கு தண்டனை விதிப்பதே செங்கோலுக்கு அழகாகும், தேவே!

(இங்-வ.) மந்திரீ! இவளை எப்படி கொடிய தண்டனைக்கு ஆளாக்குவேன்? என் மனம் மெத்தவும் கிலேசமடைகின்றதே.

(மங்-வ.) கொடியபிழை செய்தவர்களை கடினமான தண்டனைக்குள்ளாக்குவதே நீதி, தேவே!

(இங்-வ.) அப்பா மந்திரீ! நான் அப்படிச் செய்ய விரும்பேன். அவளை நான் சபையோரறிய தண்டித்தாற் போலவும், அவளுக்கு ஒரு கொடிய துன்பம் இல்லாததுபோலவும், ஒரு ஆக்கினைசொல்வாய்.

(மங் - வ.) ஊர்வசியைத் தண்டிக்காவிடில் மற்ற அப்சரப் பெண்கள் தூறுவார்கள், அவளுடைய சிறகை வாங்கச் செய்வ



துடன் சபைமுன் அவள் கனத்தையும் குறைவு செய்விப்பீர் வேந்தே.

(இங்-வச.) அப்பா மந்திரீ! அவள் பெருமையை இவர்கள் முன் குறைக்க மனங்கொள்ளேன், நீ சொன்னபடியே சிறகுகளை மாத்திரம் வாங்கச்செய்வேன், அவைகள் மறுபடியும் வளர்ந்தோங்கும். ஓ தூதரே! இவ் ஊர்வசியை வனத்திற் கொண்டுபோய் இவளது இரண்டு பறைகளையும் வாளினால் வீசி எறிந்து, இந்த எல்லைதாண்டி விரட்டி வருவீர்களாடா.

(தூத-வச.) அப்படியே சுவாமி.

(ஊர்-வச.) அடியாள் போகட்டுமோ?

---

இங் - தரு. இரா - சாமா; தாளம் - ரூபகம்.

என்னவிதி வந்ததடி இன்றுனக்கு மானே.

ஏதுசெய்வேன் உன்பிழையோ ஏற்கப்போமோதேனே
ஏங்கவுளம் ஓங்கத்துயர் இன்றும் அடியானேன் (என்)

நரனையிங்கு அழைத்துவர நியாயமோதான் மானே
நால்வருன்னை நகைக்க அடி நாளாயிற்றேதேனே (என்)

மீட்கவுன்னை ஏதுமார்க்கம் இன்றுகாணேன்பாவி
மேனிவாடு தேதுசெய்வேன் மிருதுபாஷணிதாவ் (என்)

ஆடல்பாடல்என்றுகாண்பேன் ஐயோநானுங்கண்ணே
ஆசைவிட்டதோஷிபோல அலையச்செய்தாய்பெண்ணே (என்)

(இங்-வச.) ஆ மாதே! நான் என்னசெய்வேன், என்மனதில் என்றும் நீங்காத துன்ப மூட்டையை கட்டிவைத்துவிட்டாய்; நாயகி! இதுவும் விதியின் கூறோ? அல்லது எவரின் சாபக்கோளோ? போ, போ.

(தூத-வச.) அம்மா ஊர்வசி! சரியாயில்ல தாயே. இதோ உன் சிறகுகளை களைந்துவிட்டோம், இனி எங்கையாகிலும் போவாய் அம்மணீ. சிங்காரத் தோட்டத்தில் போயிரு; இந்திரன் அங்கு வரும்போது அவரைவணங்கி வசப்படுத்தி, எப்போதும் போலச் சபைக்குவருவாய் அம்மணீ. அரசே! ஆக்கினை இட்டவாறு நடத்திவிட்டோம் சுவாமி.

(இங்-வச.) அப்படியா! ஆ ஊர்வசி விதியே விதி: மதியால் என்னமாறும். பெண்ணே, மேனகா! இப்போது என்மனம் மெத்தவும் கிலேசத்திற்கு உள்ளாயிற்று, நீ ஒரு திவ்ய பதம் பாடி அதை நீக்குவாயா?

(மேன-வச.) நல்லது அரசே.

(நாரதர்-வச.) ஓ அப்சரப்பெண்களே! நீங்கள் மூவரில் முறைப்படி ஒவ்வொருவர் தனித்தனியாகப்பாடி நடித்து இந்திரமகாராஜன் கொண்டிருக்கும் வியாகூலத்தை இப்போதே நீக்கவேண்டியது. இல்லாவிடிலோ அரசன் அதிக விசனபீடிதனாய், இந்தச்சபை முன் யிருந்தவாறு யினிசோபிக்கப்பார்க்கான் யென, நானும் மற்றும் இங்கிருப்பவர்களும் நினைக்க, அரசனுடைய முகக்குறியானது இடந் தருகின்றது பெண்களே.

(அப்சர-வச.) நல்லது சுவாமி நாரதபகவானே! அவ்வாறே நாங்கள் பாடி நடித்து, வேந்தன்கொண்ட வெறுப்பை நீக்கி, உளத்தில் உல்லாசங்கொள்ளச் செய்கின்றோம்.

---

ரம்பை-ஜாவளி, பியாக்-ஆதிதாளம்.

உந்தனைமனம் நாடுதேகூட - உந்.

ஆசைதோருது ஆவல்மீறுது
பாசமிதோவாருது உந்தனைமனம் - (நா)

மோகமாய்க்காணுது முறையிடநாணுது
போகமிதோதோணுது உந்தனைமனம் - (நா)

எங்கெங்கோஓடுது ஏதேதோநாடுது
ங்கமிதோவாடுது உந்தனைவனம் - (நா)

ஆருடன்சொல்லுவேன் அனங்கனைக்கொல்லுவேன்
சோருமையல்வெல்லுவேன் உந்தனைமனம் - (நா)

(நாரதர்-வச.) ஆ ஆ! சபாஷ் ரம்பா: பெண்ணே மேநகா! ரம்பையினுடைய பாடலைக்கேட்ட இந்திரன், கண்களைத்திறந்து சபையை ஒருதரம் பார்த்து மறுபடியும் உடனே மூடிக்கொண்டதால், இனி உன்னுடைய முறையன்றோ?

(மேநகை-வச.) ஆம் சுவாமிகளே!

(நாரதர்-வச.) நீ செய்யும் முயற்சியால் இந்திரன் கெக்கெக்கென நகைக்கவேண்டுமாக்கும்.

(மேநகை-வச.) அப்படியே செய்விக்கின்றேன் பார்த்து ஆனந்தங்கொள்ளுவீர் சுவாமிகளே!

---

மேநகை-ஜாவளி, கெத்-காபி, ஆதிதாளம்.

இனி உனைவிடப்போமோ ராஜே. - (இனி)

மாரனும் பாவி
மலர்க்கணை தூவி
மயங்கச்செய்குறான் யெனைத்தாவி - (இனி)



ஆரைநான் கோருவேன்
ஆசையுந் தீருவேன்
அனங்கன்வேதையை நீக்கிமீறுவேன் - (இனி)

உந்தனைக் கண்டேன்
ஊக்கமுங் கொண்டேன்
உறக்கம்நீ பூண்டவாறும் விண்டேன் - (இனி)

பிடிவாதம் ஆகா
பேதைமயல் போகா
பிரபுநீ யருட்பார் நற்றியாகா - (இனி)

(நார-வச.) ஆ மேநகா! நீசெய்த காரியத்திற்காக உன்னைக் கொண்டாடத்தக்கதே; இந்திரன் சிம்மாசனத்தின்மீது உறங்குவதைப்போலவே சிறுநகை புரிகின்றான்; கண்களை மூடாமல் சபையோரைப் பார்த்தவாறும் இருக்கின்றான். ஓ பெண்ணே திலோத்தமா! இனி உன்னுடைய பாரியாகையால் அரசன் எழுந்து உன்னை ஆலிங்கனஞ் செய்துக்கொள்ளும்வாறு பாடி நடிப்பது உன் முக்கிய கடமையாகும்; நீயோ மெத்தவும் புத்திசாலி; காமம் என்பதைக் கருக்கிய கைலாநாதனைக்கூடக் களைப்புறச் செய்யத்தக்க ஜாலம் உன்னிடம் அயிக்கியப்பட்டிருப்பது அறிவேனாதலால், விசேடமாய்ச் சொல்லவேண்டிய தென்னவிருக்கின்றது?

(திலோத்-வச.) உம்முடைய அநுக்கிரகமாத்திரம் அடியாள்மீது இருக்குமாயின் தாங்கள் ஆக்கினையிட்டவாறு நடந்தேருவதும் ஒரு அதிசயமா? பாரும்.

---

திலோத்தமை - தில்லானா, ஆதி.

நாதர்தரதோம் சுந்தர்தரதீம்
தநநநந மபநிதப
தபமகரி பமகரிச - (நா)

தினமுந்தன்போகமதை மனதினிடங்கனிந்தே
தினம்நினைந்துடலதோ கனங்குறைந்ததுமிதோ - (நா)

ஏனினமோடியடா என்மேலடுக்காதடா
நானினிச்சகிக்கேனடா நயவுரையாடடா

வாததேனே சூததாமே
பாதகனே போ-போ-போ
நீதமல தீததாகும்
கோதையிடம் வா-வா-வா
ஆதரவுன் பாதமது
மாதெனக்கே தா-தா-தா

நாதா யிங்கள் - வா
நீதா சுகம் - தா
போதாகுதே
ரிசநிதப சநிதபம
தபமகரி பமகரிச - (நா)

(இங்-வ.) ஆ! ஆ! சந்தோஷம், மெத்த சந்தோஷம், இன்றேது திலோத்தமா! என்மீது இவ்வளவு தயைவந்தது, இன்னம் ஒரு பதம்பாடாயா?

(நார-வ.) சரி சரி திலோர்த்தமா! இதுதான் சமயம், அந்த ஏனோடாமோடி, எனும் பாடலை இந்திரனைக் கேட்கச் செய்யத் தக்ககாலம். நான்கொண்ட என்ணங் கைகூடும்போற் காணுகின்றது. இதோ உன் நடிப்புக்கு மெச்சினேன் மாதே.

(திலோ-வ.) சுவாமி அதுவே பாடுகின்றேன்.

---

திலோத்தமை - ஜாவளி - கதம்பம் - மீஸ்ரம்.

ஏனோடா யிந்தமோடி
என்னைச்சேர வாவேண்டா (ஏ)

கனிவுடன் வுந்தனையே
கண்டு கொண்டு உண்டு மாசை (ஏ)

நென்றலதை சகிக்கேனடா
தேம்பி சோம்பி வீம்ப தின்னம் (ஏ)

மாராமையல் மீறுதடா
மாறி மீறி சோருதுடல் (ஏ)

காமிகட்கு லஜ்ஜையேண்டா
காரு பாரு சேரு என்னை (ஏ)

(இங்-வச.) அப்படியா?

(நார-வச.) மாதே திலோத்தமா! இதுதான் காலம் கண்டா களைக்கப்போகாது, என் எண்ணம் யீடேரத் தக்கவாறும், ஒரு அப்சரப்பெண்ணாகிய ஊர்வசியை நீக்கியதால் இந்திரன் கொண்ட யேக்கத்தைப்போக்கி ஊக்கத்தை யூட்டத்தக்கவர் மற்ற மூவரில் இல்லாமற் போயினவென்னும் இழிவானவசை உங்களைச் சாராவாறும்பாடி நடிப்பது உன்னுடைய பாரம், பாரம், பெண்ணே,

(திலோ-வச.) நல்லது முனிநாதா; தங்கா மேனகா! நீ என் அருகில் நிற்பாயா?

(மேன-வச.) நல்லதடி தங்கா.

---



திலோர்த்தமை - ஜாவளி. காபி - ஆதிதாளம்.

பொறுக்கயினிப்போகா போகாது பூவையே
பூபனுக் கென்மீது கோபம்வந்த தேது
ஆபத் பந்து தாபமிட்டாற்
பாப மென ஓது (பொ)

சுந்தரக் காமிமுன் சொன்னதைக் கோரிநான்
சொக்கினேனே பாரு பக்கல்வந்துசேரு
சிக்கறுக்கும் பக்குவமாய்
இக்கணம்போய்க் கூறு (பொ)

என்னென்னமோசொல்லி இங்குநின்றுமெல்லி
எடுத்துமுகம்பாரான் அடுத்ததுயர்தீரான்
கடுக்குதுடல் முடுக்காய்க்கணை
தொடுத்துமாரான் வாரான் (பொ)

என்னென்னமோமனம் எண்ணுதுயிக்கணம்
எந்தன்மீதுவாது சந்தமல்லவோது
பந்தனங்கள் தந்திடவே
வந்தனமிப் போது.

(இங்-வச.) ஆ அன்பும் ஆசைக்கும் உறிய அன்னமே! திலோத்தமா! இன்றல்லோ உன்னுடைய அதி உசிதமான பாடலையும் ஆடலையும் பார்க்கலாகினேன். சபையோர்களே! ஐயா நாரதரே! அந்த ஊர்வசியை நான் சபையைவிட்டு அகலச்செய்ததால், இனி அவளைப்போல் நடிக்கத்தக்கவர்கள் இங்கில்லையேயென இதுவரையிலும் நீங்கள் கொண்டிருந்த வியாகூலத்தை, திலோத்தமா நடித்த நாட்டியத்திலும், நடித்த சிங்கார ரசமடங்கிய பாடல்களைக் கேட்டதிலும் நீக்கினீர்களா இல்லையா? நான் கேட்க எடுத்துரைப்பீர்கள் கனவந்தர்களே.

(சபை-வச.) இனி என்றும் எங்களுடைய மனதில் ஊர்வசி எனும் பெயரை கவனிக்காவண்ணம் திலோத்தமா செய்வித்ததால், தங்களுக்கும் அவ்வாறே தோன்றியிருக்கும் என நம்புகின்றோம் அரசே.

(இங்-வச.) அதற்கொரு தடையா? மாதே திலோத்தமா! என் அருகில்வந்து நிற்பாயடி நீலஜாக்ஷி, உனக்கும் சுகம் எனக்கும் ஆனந்தம் அடி மயிலே!

(திலோ-வச.) நல்லது என் நாயகனே! வந்தனம்.

---

# இரண்டாவது பிரிவு.

(ஊர்-வச.) ஆ சந்தனம்! என்றால் உனக்கு துன்பம்வந்ததா? இனி என்று உன் முகத்தைக்காண்பேன்? என் துரையே! என் பெருமையும் குலைந்தது, நீயும் மீளா கெவிக்குள்ளாயினாய், நாயகா! நான் எவ்வளவோ வருந்திச்சொல்லியும் கேளாமற்போனையே? ஐயையோ பரமேஸ்வரா!!

ஊர் - ஜாவளி. இரா - காம்போதி; ஆதிதாளம்.

ஆகினேன் இக்கெதி சந்தனனே - நான்
ஆரிட்டசாபமோ அறியேன் என்நாயகனே (ஆகி)

எத்தனைவிதமா யுமக் கெடுத்து நான் ஓதியும்
எத்திடாராகினீர் இதற்கோ என்நாயகனே (ஆகி)

இந்திரன்கெவிதனில் இட்டானே பாவியும்
இனியுன்னைக்கூடுவ தெப்போதென்நாயகனே (ஆகி)

கிட்டியகனிவாக் கிடுமுனே யிழந்திடக்
கிடெது செய்தேனோ கெதியார் என்நாயகனே. (ஆகி)

(ஊர்-வச.) ஆ தெய்வமே! என்னை இக்கெதிக்கு ஆளாக்கி விட்டாயா! நான் ஆசைகொண்ட மணவாளன் எனக்குக் கிடை, அவனோடு அனுபவிக்காமுன் பிரித்தனையே! என்போலொத்தவர் என்னைக்கண்டு நகைக்கவும் ஆளாக்கினையே! இன்னம் என்னதான் செய்வாய்! ஆ சந்தனமேனியா! என்றால் நீ கெவிக்குள் ஆனையா! இதுவும் விதியின் சோதனையா! ஓ ஜெகதீஸ்வரா!

---

ஊ - ஜாவளி. இரா - தோடி; ஆதிதாளம்.

சரச சல்லாப சன் மானனே ராஜா
சதியா ளுமைப்பிரிய லானனே ராஜா

என்றைக் கினிக்காணுவ தென்னவே மனம்
ஏங்கி யழுகலானேன் புண்ணதாய்த் தினம்

இந்தவிதி யெழுத வையனும் பாவி
எண்ணங் கொண்டதுமேனோ காணனே தேவி

ஆளைப் பிரித்தோமோ நாமன்றுமே
அகன்றிருந் திடலானோம் யின்றுமே

போரேன் சிங்காரவனஞ் சந்தனம் நான்
பொறுக்கேன் காமனுக்கிதோ வந்தனந்தான்.

(ஊர்-வச.) இனி என்செய்வேன்! எங்கு செல்வது! தூதன் சொன்னவாறு சிங்காரவனத்திற்கு செல்வோமா, அங்கு தேவதா



பெண்களெல்லாம் வருவாரோ? நம்மை இக்கோலத்தில் கண்டு நகைப்பரோ? என்ன யோசனை? உருமாறிப்போவோம், இந்தப் பெண்வேடத்தை நீக்கி ஒரு சந்நியாசியைப் போல மாறுவேடம்பூண்டு செல்வோம் இதுவேசரி, அங்கொருவேளை இந்திரன் வந்தாலும் வசப்படுத்திக் கொள்ளலாம்.

---

ஊர் - கண்ணி. இ-ம் - தன்யாசி, ஏகதாளம்.

ஏதோ நாதா பவமதிழைத்தேனோ
ஈசனருள் யிதாமோ (ஏதோ)

மாதோ நானோ பாவி பாவி
மன்னனுங் கெவிக் குள்ளானான் (ஏதோ)

கும்பிகொதிக் குதே என்நாதா
கொழுநா சந்தனராஜனே (ஏதோ)

வெம்பிவெருண்டு வெறுநேதமனம்
விதியின்செயல் யிதுவாமோ (ஏதோ)

(ஊர்-வச.) ஆ பிராணேசா! தனியே புலம்பலானேன்; நீரோ அதிக துக்கத்தை யடையலானாய்; ஐயையோ சர்வேஸ்வரா.

---

ஊர்-ஜா. இ-ம்-கேதார்; ஏகதாளம்.

சாமியே சந்தன சற்குண மாணியே
பூமியில் விட்டெனைப் போனாயே தனியே

ஆசையாய்த் தேடிய அற்புதக் கிளியே
வேசம் நான் குலைந்திட விட்டாயே அளியே

ஆரினி யென்னையே ஆதரிப்பவர் சாமி
அலையுறேன் ஒண்டியாய் அடவியில் உன்காமி

இந்திரனுங் கெவிதனி இட்டானே பாவி
எழுதி யிருந்தவிதி இதுவாமோ தாவி

கொண்ட என்பெண்ணங்கை கூடாத முன்னே
கோதைக்கு இத்துயர்வரக் கோனேதோ பின்னே.

(ஊர்-வச.) ஆ என் ஆசைக் குகந்த அரசே! அடியாள் இனி எப்போ உன்முகத்தை காணப்போறேன்? இந்த கெதியைக் காணவா மோகினி வனத்தில் சயனித்திருந்த உன்னை என்னிருப்பிடம் எடுத்துவரச் செய்தது? இனி என்செய்வேன்? என்செய்வேன் விதியே?

ஊர்-ஜா. இ-ம்-தோடி; ஆதிதாளம்.

விதியே போதுமே வேந்தனை விட்டேன்
பதியெலாந்தேடியும் பார்க்கொணுதநல்ல
பலனைப்போக் கடித்தாயே (விதி)

தூங்கியமன்னவனை தூக்கிவந்திடச்செய்தும்
தோஷியாய்வாடலானேன் தூறுவந்ததே (விதி)

மஞ்சத்திருத்திமன மகிழ்ச்சியாய் ஆடும்வேளை
மாபாவிதூதுவிட்டான் மாறல்வந்ததே (விதி)

தடுத்தும்நான்கூறியும் தாவிநீவந்தாயே
தனியாய்ப்புலம்பவிட்டாயே தாழ்மைவந்ததே (விதி)

என்றுன்முகங்காண்பேன் ஏதுசெய்குவேன்சுவாமி
என்னுயிர்வைக்கேன் இனியே ஏழ்மைவந்ததே (விதி)

(ஊர்-வச.) ஆ விதியே! என்னைபஞுதி ஆக்கினையா! ஓ சந்தனமேனியா! கெவியில் நொந்திடலானையா? இந்திரன் அறையவும் நான் குறையவும் நீ மறையவும் பலர் நகைபுரியவும் வந்து நேரிட்டதே? ஐயையோ துரையே!.

(காவ-வச.) ஆரப்பா சந்நியாசி.

(சந்நி-வச.) நான் பரதேசி அப்பா.

(காவ-வ.ச) எங்கு வந்தனை?

(சந்நி-வச.) என் மனேவியாதியை ஒருவாறு நீக்க இவ்வனம் அடைந்தேன்.

(காவ-வச.) அப்படியா! இது சிங்காரவனம், ஒன்றையும் தீண்டப்போகாது, தீண்டில் சிரச்சேதம் வாய்த்திடும் அறிவாய்.

(சந்நி-வச.) நல்லது அப்பா காவலனே?

---

சந்நி-ஜா. இரா-கமாஸ், தாளம்-ரூபகம்.

இதற்கோ நீயும் எனை தொடர்ந்ததிங்கே நாதா
இன்பமும்போனதே என்னைமுந் திர்ந்ததே
ஏகிஞய் ஏகிஞய் ஏகிஞய் ஏகிஞய் (இ)

ஆரைத்தூதுபோகச்செய்வேன் அலைதெவ்வாறுகாணலாவேன்
தாறுக்கெனை ஆளாய்விட்டு துரைநீயும் கெவியிற்பட்டு
போயினுய் போயினுய் போயினுய் போயினுய் (இ)



எங்குபாவி உன்னைப்பார்ப்பேன் எவ்வாறுந்தனைக்கூடுவேன்
மங்கிடவும் வந்ததோ மரிக்கமுறை செப்பாதேதோ
மாறிஞய் மாறிஞய் மாறிஞய் மாறிஞய் (இ)

ஆசையதுமீறுதே அலுத்துமேனிசோருதே
தோஷியாக நின்றேனே துயரமிகக்கொண்டேனே
தோணிடாய் தோணிடாய் தோணிடாய் தோணிடாய். (இ)

(காவ-வச.) ஆ ஆ! இந்த சந்நியாசி பாடுந் தொனியைக் கேட்ட குயில்களும் கிளிகளும் மற்றப்பறவைகளும் பரவசமாய் குந்திய விடம்விட்டு போகாமல் இருக்கின்றன. இவ்வளவு இனிப்பான குரலுடன் பாடுபவரை நாம் என்றுங் கண்டதில்லை. இன்னும் சற்றுநேரம் இவருடைய பாட்டைக்கேட்டு நமது அரசனுக்கு ஓடி அறிவித்தால் நமக்கு ஏதாகிலும் வெகுமதி கிடைக்கும்.

---

சந்நி-ஜா. இ-ம்-பியாக், ரூபகம்.

உனைப்பிரிந்திங் குளரலானேன் பதியே
ஊர்வசிக்கும் மாறுவேடம் உற்றதும்விதியே
(உனை)

ஆரண்யத்தில் உன்னைக்கண்டு ஆசைநான்கொண்டு
அனுப்பிப்பூதங் கொணர்ந்தும் என்னை அலையவிட்டாயே
(உனை)

ஆசைமீறிப் பாடிவீலை யாடிடுங்காலை
அழைக்கவந்தான் சேர்வைதானும் ஐயோ நான்பாவி
(உனை)

கூடவரலாகாதெனக் கோதைதான் வேண்டிக்
கூறியதைத் தடுத்துவந்து குகைக்குள்ளானீரோ
(உனை)

அடியாள்கொண்ட விருப்பமெல்லாம் அரசே சந்தனம்
ஆற்றிற்கரைத்த புளியதுபோல ஆக்கிவிட்டாயே
(உனை)

(சந்நி-வச.) ஆ என்சாமி! மனக்கர்மி! குணநேமி! ஓடிவா! எனைக்கிட்ட, கைப்பற்ற, சுகம் நற்ற, மனமே! நீ கலக்கத்திற்

குள்ளானுயா? கணவனைப் பிரிந்தாயா? கனமும் குறைந்தாயா? சுகத்தையும் மறந்தாயா? விதியே! விதியே! ஆ விதியே!

---

சங்-ஜா. இரா-தேசிகம், ஏகதாளம்.

நொய்யுதே நெஞ்சமிதோ நோன்பென்ன நூற்றேமடா
நீதுரையென் நாயகமே நாயகனே கெட்டாயோடா (நொ)

எவ்வாறுன்னைப்பிரிந்தே இருப்பது துயரணிந்தே
இங்குதனியாய்ப்புலம்பி ஏங்கவிட்டாய் என்னடா (நொ)

ஆவியுளமட்டுமென்னை அலையவிட்டாய் நினைந்துன்னை
ஐயையோநான் இவ்வனத்தில் ஆருந்துணைகாணேனடா (நொ)

தேங்குமாவு பலவிருக்ஷம் தெரியுதே யிங்கொருபட்சம்
தேடியும் சந்தனமரம் சிக்கிடாத தென்னமோடா (நொ)

அந்தமான பலபட்சி ஆடிப்பாடுதிதோ கட்சி
ஆளன்சந்தனன்நடைபோல் அசைக்கவெதுங்காணேனடா (நொ)

கூவிக்கூவியிங்குநான் குந்திநோக்கியும் உந்தன்
குர ொலிபோலவேதொனி குயிலும்பேசக்காணேனடா (நொ)

..தமானபுஷ்பம் விளைந்திருக்குதே இங்கென்
..வந்தன்முகமலர்போல விளங்கவெதுங்காணேனடா (நொ)

சந்தமாகப்பலகுன்று சார்ந்ததிங்கே வெகுநன்று
சந்தனன்புயத்தை ஒத்த சாடையெதுங்காணேனடா (நொ)

தோணவேகதலிமரந் தொகையாய்நிற்குதேசரம்
துரைசந்தனன்துடைபோல தோற்ற எதுங்காணேனடா (நொ)

காணுதேசெங்கழுநீரும் கண்ணுருக்குமிழம்பூவும்
காமிசந்தனன்நாசிபோல் காட்டவில்லையேஎன்னடா (நொ)

(சங்நி-வ.) ஆ மனமே! ஏனிப்படித் தயங்குகிறுய்! எழுதாத விதி அழுதால் வருமா? நாம் முன்னொரு காலத்தில் புருருவ ராஜனைவிட்டுப்பிரிந்து, அவன் நம்மைக்கோரி மெத்தவும் பிரலாபித்து அழுதலையச்செய்தோமல்லவா? அவ்வினையானது இன்றைளில் வந்து மூண்டது; துயரப்படாதே. ஆ கண்களே! உங்களுக்கு நான் எவ்விதமான தேறுதல் சொல்லியும் ஆறைப்போல் நீரைப்பெருக்கி வேற்றுருவாகினீர்கள், என்னசெய்வேன்.

---



சங்நி-ஜா. இ-ம்-சுருட்டி, ஆதிதாளம்.

என்கண்களும்தேடுதே காமி எப்போதுகாண்பேன் சாமி.

என்று என்துரை எனைக்கூடுவாரோ
இருகொங்கைதொட்டு இருந்தாடுவாரோ
இவ்வாசையென்னைக் கெடுத்ததே (என்)

சந்தனமேனியா சாமிநீவாடா
சாகிறேன்உன்னாலே சங்கடமோடா
சரசியை மறந்தாயோடா (என்)

தாயையும்வேண்டேன் தந்தையைப்பார்க்கேன்
தரணியில்மற்றோரை தழுவிடச்சேர்க்கேன்
தலைவிதி தயங்கவிட்டதே (என்)

(சங்நி-வச.) ஆ துரையே! உன்னைப்பிரிந்த அடியாளுக்கு இங்கு தோன்றும் சுகந்தமலர் வாடைவீசுவதில் என்னகுணம்? இனி எனக்கேது சுகம் நாதா.

---

சங்நி-கண். இ-ம் - தேசியம். ஆதிதாளம்.

உந்தனைப்பிரிந்தேசுகம் உண்டோவேறே ஓ பதி
உயிரோநிலைப்பதிங்ஙனே உண்மையாகாதேவிதி

விந்தையாயாடிடாமல் விட்டதே என்வினையே
வேகுதடாமேனியுமே விருப்பமீறி ஓ பதி (உந்)

சொந்தமானதுரையென்றே சொகுசதாய்க்கூடினேனே
சோகமீறுதிதோ வுடல் சோருதோடி வாபதி (உந்)

எந்தனைப்போல் எவரும் ஏங்குவரோபாரிலே
ஏதுபழிசெய்தேனடா இங்குசந்தனம்விதி (உந்)

(காவ-வச.) பராக் பராக் இந்திர பதியே!

(இந்-வச.) சிங்காரத் தோட்டத்தில் ஏதேனும் புதுமையுண்டா? சீக்கிரம் தெரிவிப்பாய்.

(காவ-வச.) சுவாமீ! கானலோல வஜீகரா? நமது சிங்காரவனத்தருகில் ஆரோ ஒரு சந்நியாசி திவ்யமாய் பாடிக்கொண்டு அலைவதைக்கண்டு அறிவிக்கவந்தேன் வேந்தே.

(இந்-வச.) அப்படியா, அவவளவு நேர்த்தியாய் பாடுகின்றுளு?

(கா-வச.) சுவாமீ! இரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை, நாரதர் இவர் ... ச் சுகமாய் பாடுகின்றுன் தேவே.

(இங்-வச.) அப்படியானால் சீக்கிரம் அழைத்து வருவாயடா காவலனே.

(காவ-வச.) மகாபாக்கியம் தேவே.

---

ஊர் - ஜாவ. இ-ம்-இங்-பைரவி, ஆதிதாளம்.

கர்த்தனுமுனைப்பிரித்துமே கலங்கச்செய்தான் சந்தனைம்
கண்கள்தேடுதேயிதோ காடுறைந்தேன் வந்தனம்

அலையலானேனுனைத்தேடி அரண்யமெங்குந் தான்
ஆவிசோரிவாடலானேன் அபயமிட்டும் நான்

கூடியுனைசுகிக்கக்கொண்ட கோரிக்கையால் நான்
கூவிக்கூவிச்சாகலானேன் குறையெதுவோ தான்

எந்தநோயைவிடநீயெனக் கிட்டநோய்க்கேதான்
எங்குமருந்திலையிதோ இரக்கப்போவேன்நான்

மருந்திலாப்பிணியெனக்கு வரச்செய்தாய் நீதான்
மாரைத்தொட்டுமுத்தமிட்டு மறைந்துபோவாய்தான்.

---

சங்கி-ஜாவ. இ-ம் - காபி, ஏகதாளம்.

புலம்பலானேனே வினையாதோ தனியாய்
நாதா போனவிடமும் அறியேனே (பு)

நினைந்து நினைந்துமனம் நெட்டுயிர்போக்கி
நின்றிடலானேன் நீ தனிக்க
நினைக்க நினைக்க இங்கு நின்று அழலானேன்
நீதான் போனவிடமும் அறியேனே (பு)

ஏங்கி ஏங்கி மனம் [illegible]மெண்ணி
இ[illegible] [illegible]
நினைக்க நினைக்க நொந்து (பு)

கரைந்து கரைந்து உடல் காட்டினிலலைய
காலமுமாச்சே காமினிக்கே
நினைக்க நினைக்க நொந்து (பு)

( [illegible] ) ஐயா சங்கியாசி [illegible] [illegible] [illegible]ப்பது?



(சங்கி-வச.) ஐயா! நான் பெண்டிழந்தபேதை, என்பெயர் சந்தனம்பூசி, என் நாயகியை பூதம் எடுத்துப் போய்விட்டது, இப்படித் தனியாய்ப் புலம்புகின்றேன் அப்பா.

---

காவ-கண். இ-ம், குறிஞ்சி - அடதாளம்.

சொல்லுவேன்சந்நியாசி சூட்சமேபார்
சுந்தரஇந்திரனே சொன்னதைத்தேர்
ஆரோஉன்பெருமையை அறைந்தனர்பார்
அழைத்துவாவென்றனன் அறிந்துநீசார்
ஆடலில்பாடலில் ஆனந்திபார்
அளிப்பான்உனக்குப்பொன் அனந்தமாய்க்கோர்.

(காவ-வச.) சந்நியாசியே! எங்களரசர் அழைக்கின்றார், அவரோ கானலோலர், உன் பாட்டைக்கேட்டு மகிழ்ந்தால் உனக்கு வேண்டியதைக் கொடுப்பார், வருவாயா?

(சங்கி-வச.) அப்பா! நானோ சந்நியாசி, எனக்கு வேண்டிய வஸ்து ஒன்றுண்டு, அதை அவர் கொடுப்பாரென எப் வருவேனப்பா?

(காவ-வச.) அவரோ இந்திரன், நீஎதைக்கேட்டபோதிலும் அந்த வஸ்து எவ்விதமானதாக இருந்தபோதிலும் அ லோகத்தில் இருந்தாலும் வரவழைத்து உடனே கொடுப்பது நிச்சயமாகு, ஆனால் நீ அவர் மனங்களிக்கும்படி மாத்திரம் வேண்டியது சந்நியாசியே.

(சங்கி-வச.) அப்படியே பாடுகின்றேன், என்னை அ ச்செல்லுவாய்.

(காவ-வச.) வாரும், இதோ பாரும் இந்திரன்சபை ரத்தினகசித சிம்மாசனத்தின்மீது இரம்பை மேனகை தி[illegible] தமை அருகில் நிற்க மகா வைபோகமாய் வீற்றிருக்கும் மகாநு பாவர்தான் இந்திரன், நீ முன்சென்று போற்றி செய்புவாய் சந் யாசியே.

(சங்-வ.ச) நல்லதையா, அரகரா அரோகரா சம்போ சங்கரா மகாதேவ ஜயபரமேஸ்வரா போற்றி, இந்திர ராஜனே போற்றி.

(இங்-வச.) வாரும் சந்நியாசியே, உமக்கு பாடத்தெரியுமா

(சங்-வச.) என்னமோ கொஞ்சம் சம்போ சங்கரா என பாடத்தெரியும், கொஞ்சம் ஆடவும் தெரியும் வேந்தே.

(இந்-வச.) ஆ! ஆ! அப்படியா ஏதோ மோகமீறும் முறையான பதங்கள் தெரிந்தால் பாடும் பார்ப்போம்.

(சந்-வச.) தாங்களோ மகா உன்னத ரஞ்சிதமான பாட்டுகளைக் கேட்ட செவிகளை உடையவர், உத்தரவாகில் எனக்கு தெரிந்தமட்டிலும் காமமூட்டும் சிலபதங்களைப் பாடுவேன்.

(இந்-வச.) சீக்கிரம் சீக்கிரம் ஆரம்பியும்.

(சந்நி-வச.) மகாபாக்கியம்.

---

சந்நி-ஜா. இ-ம்-காபி; ஆதிதாளம்.

மன்னனைப்பிரிந் தமுதலாய் கண்ணுறங்காதேன்காரணமோ

அல்லும்பகலும் ஆசைமீறிடவும்
அடிக்கடி அவன்பெய ரகத்திலினைக்கவும்
சொல்லதுமாறி சுகமும்வேசாரி.
சோருடனீரும் துறந்தனையே

(இந்-வச.) ஆ! பளா, மெத்த சந்தோஷம், இந்த சந்நியாசிக்கு பட்டுபீதாம்பரம் கொடுப்பாய் மந்திரி.

(மந்-வச.) அப்படியே அரசே.

(சந்நி-வ.) காவியணியும் சசடனுக்கு கனத்தவஸ்திரத்தால் பலன், வேண்டேன், அரசே.

சரணம்.

ஆருடன் நானும் அன்புடனடி
அவன்பெயரைநா வரையுதேசேடி
மாறதுபொங்க மனமுங்கலங்க
பக்கமாய்க்காட்டுது மாற்றென்னடி.

(இந்-வச.) ஆ! ஆ! மந்திரி! இந்த சந்நியாசிக்கு விலையுயர்ந்த சரிகைவஸ்திரங் கொடுப்பாய்.

(மந்-வச.) அப்படியே ஆண்டவா.

(சந்நி-வ.) ஆசைகொண்டவனுக்கு ஆடையேன்? ஆகுமா? மையல் போகுமா? வேண்டேன், அரசே.

சரணம்.

[illegible]
கோதேவருவதாய் சொன்னதே மனமும்
நிலைதுகலாய் நெட்டுயிர்ப்பிகளாய்
நிற்குறேன்பாவி நீ கெதியே (மன்)



(இந்-வச.) மந்திரி! இந்தசந்நியாசிக்கு புதிய ரத்தினப்பணிகள் கொடுப்பாய்.

(மந்-வச.) அப்படியே.

(சந்நி-வச.) சதியை இழந்த சண்டாளனுக்கு புதியரத்தினமேன்? சருவுமா? காமம்பெருகுமா? வேண்டேன் அரசே.

---

ஜவர் - ஜாவளி. இரா - தோடி; சாப்பு.

சாமியே நான் எதுசெய்வேன்
சந்தனங் குலைந்ததே.

மோகினி வனத்திலொரு முத்தைக்கண்டெடுத்தேன்
மோசம்போனதிவ்விடத்தே
மோகமீறுதையே - மோ. (சா)

(இந்-வச.) மந்திரி! இந்த சந்நியாசிக்கு நல்ல ஆணிமுத்துகள் கொடுப்பாய்.

(சந்-வச.) சுவாமி! நீர்கொடுக்கு முத்தால் நான்கொண்ட பித்தம் அகலுமா? அல்லது சித்தம் மகிழுமா? வேண்டேன் அரசே.

கண்டசரத்திலிட்டு கழுத்திற்கட்டாமுனம்
கள்ளன்கொண்டுபோனானதைக்
காதல்மீறுதையே - கா. (சா

(இந்-வச.) மந்திரி! இந்தச் சந்நியாசிக்கி இரண்டு சங்கள் கொடுப்பாய்.

(சந்நி-வச.) அரசே! நீர் கொடுக்கும் கண்டசரம், கொண்டதுக்கத்தை போக்குமா? விரகத்தைத் தீர்க்குமா? வேண்டேன் நாதா.

எங்கெங்கோதேடினனும் ஏங்கிமனமுருகி
இங்குவரலானேன் தானே
என்னங்கைகூடுமோ காணேன் - என். (சா)

---

சந்நி-ஜா-(ரீதிகௌளா-திரிசாதாளம்.)

நானே ஒண்டி என்னசெய்வேன் நானே ஒண்டி
ராஜனே நான் என்னசெய்வேன்
நானே பரதேசிஐயா (நா)

தாலியமஞ்சமீதே தனித்திடலாச்சே
தவிக்கிறேனே இதோ ராஜே. (நா)

தேவியைவிட்டுமேனி திகைத்திடலாச்சே
தேடுகிறேனே (நா)
என்றைக்குக்காண்பேனென எண்ணிடலாச்சே
ஏதுசெய்வேன் (நா)
கூடிக்குலாவும்வேளை கூட்டிடவிட்டான்
கொடும்பாவி (நா)
மாரில்கரத்தைநாட்டி மருவிடுங்காலை
வாவென்றுனை சண்டாளன் (நா)

(இந்-வச.) சந்தோஷம், மந்திரி! இந்த சந்நியாசிக்கு தேவை மஞ்சம் கொடுப்பாய்.

(மந்-வச.) மகாபாக்கியம் அரசே.

(சந்நி-வச.) அஞ்சலி நீர்கொடுக்கும் மஞ்சம் என்னுடன் கொஞ்சுமா? குலாவுதல் மிஞ்சுமா? வேண்டேன் அரசே.

---

சந்-ஜா. இராகம்-ஆகந்துரை [illegible] தாளம்.

நினைவாலேமெலிந்து வாடலானேனே
மன்மதரூபா வருந்திடலானேன் (நினை)
உன்னுடைசையாலே உறக்குலைந்தேனே
உளரிடலானேன் இதோ (நினை)
ஆர்தனைநானே அடைவதுபாவி
அலைந்திடலானேன் இதோ (நினை)
சரசனும்[illegible]
சருவிடாததுமேன்வினையோ (நினை)

(இந்-வச.) ஆ! ஆ! மெத்த சந்தோஷம் சந்நியாசியே! உன் னுடைய பாட்டைக் கேட்டதால் இன்று நாளும் என்சபையிலும் யாரும் எடுத்த ஜன்மம் சாபல்லியம் ஆச்சென்பதற்கு தடை யில்லை; இன்னம் ஒருபதம் பாடுவாயா சந்நியாசியே!

(சந்நி-வச.) அப்படியே அரசே.

---

சந்நி - ஜாவளி. [illegible] ரூபகம்.

மையல்வாளிதாக்கியே[illegible] இங்கனே
[illegible] யங்கனே
[illegible] னிங்கனே
[illegible] யங்கனே



உன்னைச்சேரக் கொண்டவெண்ண முதவாதாச்சு இங்கனே
என்னைப்பிரிந்துநீதனியா யிருக்கலானு யங்கனே
கையைத்தொட்டு முத்தமிட்டென் கடன்கழித்தா யங்கனே
மெய்யுருகி உனைநினைந்து மெலியலானே னிங்கனே.

(இந்-வச.) சந்நியாசி! நீ யிப்போது பாடிய பாடலைக்கேட்டு என்மன மிதுவரையிலடைந்திருந்த வுல்லாசத்தை நீக்கிப் பொல்லாத துயரைக்கொண்டதால், தயைசெய்து விரகத்தை விருத்திசெய்யத் தக்கதாக வேறொரு பதம் விளம்புவாயா? என் நாரதரே நான் கேட்டது சரிதானே?

(நார-வச.) மெத்தவுஞ் சரியானதே.

(சந்-வச.) அப்படியே பாடுகின்றேன் சுவாமி.

---

சந்நி-ஜாவ. இ-ம்-காகாப்பிரியா; ஆதிதாளம்.

மன்னவனே உந்தனை மங்கையுந்தேடி
மன்மதவாதையால் வாடுறேனே
வாடுறேனே இதோ தேடுறேனே
மன்மதவாதையால் வாடுறேனே.

இருவருங்கூடி இருந்திடும்வேளை
ஏமனைத்தூதன் எதிரிடலானுல்
கருமவினைப்பயனோ கலக்காமல்வாட
காமன்கணையால்இதோ கரையுதேனே
கரையுதேனே நான் குறையுதேனே
காமன்கணையால்இதோ கரையுதேனே.(மன்ன

(இந்-வச.) அப்பா மந்திரி! இந்த சந்நியாசிக்கு வேண்டிய பொன் கொடுப்பாய்.

(மந்-வச.) நல்லதாண்டவா.

(சந்-வச.) சந்நியாசிக்கு பொன் ஏன்? வேண்டேன் அரசே

முகமுகம்சேர் முத்தங்கொடுத்து
மோகமுந்தி முனைந்துநாமாடி
சுகமதுபெருக்கி சொக்கிடாமுன்னம்
குதைஇழைத்தனனே சுந்தரனே
சுந்தரனேயார் தந்திரமோ
குதை இழைத்தனனே சுந்தரனே.(மன்ன

(இங்-வச.) சந்நியாசி! இந்த மோகனமாலையைத் தயவுசெய்து கொள்வாயா?

(சந்நி-வச.) அரசே! போகமிறந்தவனுக்கு மோகனமாலையால் என்ன பலன்? வேண்டேன் தேவே.

குடங்கையில் தாங்கி கொங்கையைகாட்டி
கோவையிதழைஊட்டி கூடிடாமுன்னம்
சடுதியில்வாவென சாற்றினன்பாவி
சரசியும்வாடுறேன் சந்தனமே
சந்தனமே இதோ வந்தனமே. (மன்ன)

(இங்-வச.) மாதே! இரம்பா இந்தசந்நியாசி உங்களைப்போலப் பெண்ணாயிருந்து இவ்விதம்பாடினல் காமத்தைவெறுத்துக் கரை கடந்த யோகிகளாயினும் கலந்தணைய எண்ணுதிருப்பாரா.

(இர-வச.) இருக்கமாட்டார் நாயகா.

(இங்-வச.) சந்நியாசியே! நீமெத்தவும் சந்தோஷத்தைக் கொடுத்தாய், இனி உன்பாட்டைக் கேட்பேனுகில் என்மனம் பொறுப்பது கடினமாகும், உனக்கு வேண்டியதைக்கேள் கொடுக்கின்றேன், என் செங்கோலைக்கேட்டாலும் தடைசெய்யேன், இது நம, இது சத்தியம்.

(சந்நி-வச.) எனக்கு வேண்டியதைக் கேட்டால் கொடுக்கப் போமோ அரசே.

மதமதுபொங்கி மயலதுஓங்கி
மாரனை ஒட்ட மருவிடுமுன்னே
விதவிதத்அன்பம் விளைந்துதேசாமி
வேண்டிலேன் ஆவியை வித்தகனே
வித்தகனே என் சித்தஜனே
வேண்டிலேன் ஆவியை வித்தகனே. (மன்ன)

(இங்-வச.) ஆ! ஆ! ஆ! நீ கேட்டதைக் கொடுப்பேன், சந்நியாசியே! அப்படிக் கொடுக்காவிடில் ஒரு நீச்சன், இந்த சபையோரறிய எங்குருவாணை கொடுக்கின்றேன் கேள், அஞ்சவேண்டாம் சந்நியாசியே.

(சந்நி-வச.) நீர் கெவியில் அடைத்த என்துரையை எனக்கு கொடுத்தருளும் வேந்தே.

(இங்-வச.) அப்பா மந்திரி? ஆ! என் சபையோரே? ஊர்வசி என்னை ஏய்த்தனள், நானும் வாக்களித்துவிட்டேன், இதற்கு நியாயஞ்சொல்லுவீர்கள் சபையோரே?



(சபை-வச.) அரசே! ஊர்வசிக்கு அசுவனிதேவர்களால் நரனைக் கூடும்படி முன்னமே சாபமுண்டு, இது முடிவாகுங்காலம் வந்துவிட்டது, இவளால் சந்திரவமிசம் பெருகவேண்டும், இவள் சாபம் நீங்கியவுடன் நரனைப்பிரிந்து இவ்விடம் வருவாள், அப்போது அவன் காமியாய் மோகினிவனம் வருவன், அங்கே கெங்கையைக்கண்டு மோகித்து அவளால் ஒரு புத்திரனைப் பெறுவன், அப்புத்திரனல் குலவிர்த்தி ஆகவேண்டிய காரணம். கெவியிலிட்டவனை சிக்கிரம் இவள்வசம் செய்து வாழ்த்தி அனுப்புவீர் வேந்தே.

(இங்-வச.) அப்படியா காரணம், ஆனுல் சரிதான்.

---

இங்-கண். இரா-குறிஞ்சி; கண்டசாதி-ஏகதாளம்.

அக்கினியோத்திராகீ இங்கோடிவா
சிக்கினேன் ஊர்வசி செய்கையில்நான்
மர்யசந்நியாசியாய் மயக்கினுள்இங்கு
நாயம்வேறில்லை நடந்துநீ அங்கு
கெவியிட்டநரனையே கிட்டியேபாலா
அவிழ்த்தவன்சிறைநீக்கி அழைத்துவாசிலா.

(அக்-வச.) ஆ! இப்படிவந்து முடிந்ததா? ஒரு பெண்ணைக்கொண்ட எண்ணத்தை எவ்விதத்திலும் முடித்துக்கொண்டாள். நாம் இனிச்செய்வதேதுண்டு நல்லது.

(அக்-வச.) அடே நரனே! இங்குவா.

(சங்-வச.) ஐயையோ! இந்திரன் இன்னம் நம்மை எப்படி செய்வானே அறியோம், விதியால் வருவதெல்லாம் வந்தே தீரும்.

(ஊர்-வச.) ஆ! என்துரையே கிட்டவா.

---

ஊ-ஜா. இரா-சாமா; தா-சாப்பு.

மருவே நீவாராய் மையலைத் தீராய்
சாமிநீ சோகத்தை சகித்தாயோ வாடா (மரு)
இந்த விதிக்கோ என்னுடனீ வந்தாயா
என்செய்வேன்கெவிக்குள் இருக்கஆனய்யா (மரு)
உன்னைப்பிரிந்து நான் ஊரினேன் நாயா
வாட்டுவேன் இதழ் ரசம் உகந்துசேராயா (மரு)

ராஜனை வசமாக்கி நான்கொண்டேன் காமி
ரசிகனே கூடுவோம் நடந்துவா சாமி. (மரு)

(சங்-வச.) ஆ! என் ஆசைக்கண்ணாட்டியே! முன் உனக்கிருந்த இறகுகள் எங்கே இப்போது காணேன்?

(ஊர்-வச.) ஓ என் ஆவியே! நானுன்னைச் சபைக்கு அழைத்துவந்த குற்றத்திற்காக, இந்திரன் வெட்டச்செய்தனன் நாயகா.

(சங்-வச.) ஆ நாயகி! என்னால் இந்தக் கொடியதண்டனைக்கு உள்ளானையா.

(ஊர்-வச.) துரையே! அதற்காக நீ யோசிக்கவேண்டியதில்லை உன்திருவடிக்கிருபையால் நான் இந்திரனைவசமாக்கி உன்னை மீட்டுக்கொண்டேன், இனி பயமில்லை, நானும் நீயும் கொண்ட எண்ணமும் ஆசையும் திரும்படி அன்னமும் பேடும்போலும், கலையும் மானும்போலும், இரதியும் மதனும்போலும், புரூரவனும் ஊர்வசியும்போலும், சமரதி, உபரதி, அதிரதி, மனோரதிகளில் நமதிஷ்டத்தை முடிப்போமடா என்சாமி, என்துரையே, ஜெயிலுக்குள் மெத்தவும் வருத்தம் அடைந்தையோ? மேனி நொந்ததோ? இங்கு சற்று தங்குவாய் உன் தேகத்தை கொஞ்சம் ... தழுவிப் பிடிப்பேனடா என் துரைச்சிங்கமே! என்சிரோ ... சித்தமே!

(சங்-வச.) அடி மாதே! என் மனோ ரஞ்சிதமே! ஜெயிலில் யே கவனித்துக்கொண்டு இருந்தேன், அடி நாயகி! சீக்கிர ... னாலானேன். இனி நாம் நமதிருப்பிடம் போவோம்வரு மதனவல்லியே.

(ஊர்-வச.) அடா சாமி! ஆக்கப்பொறுத்தனை இனி ஆறப் பொறுக்க போகாதோ? அணைத்தின் நீரை வெள்ளம் கொண்டு போகுமா? நாமிருவரும் இந்திரனிடம் சென்று அவருடைய அனுமதிபெற்றுப் போவோம், வருவாயடா என் காமக்குஞ்சரமே.

(சங்-வச.) சந்தோஷம்! ஆனால் இந்திரன் முன்போவோம் வருவாயடி மயிலே.

(அப் - வச.) ஆக்கினையின்படி நானே அழைத்து வந்தேன் அரசே.

(சங்-வச.) போற்றி போற்றி இந்திரராஜே! எளியேன் செய்த பிழையை பொறுத்து ஆட்கொள்ளவேண்டும் நாதா.

(இந் - வச.) அப்படியா ஓ நாரனே! பெண்ணே ஊர்வசி! இங்கு வருவீர்கள்; சபையோர்களே? இன்று ஊர்வசியை இந்த



நாரனுக்கு பாலித்தேன் நீங்க ளெல்லோரும் சுபம் சொல்லுவீர்களாக.

(சபை-வச.) சுபம் சுபம் சுபம் சதாஸ்த்து.

(இந் - வச.) ஓ அப்சரப் பெண்களே! நீங்கள் இவ்விருவர்களுக்கும் ஆலம் சுற்றி சோபனம் பாடுவீர்களா?

(அப்-வச.) பாடுகின்றோம் துரையே.

---

அப்சரப் பெண்கள் கண்ணி - இ-ம். நவரோஸ்-ஜம்பை.

சந்தனமகாராஜ சவுந்தரியவாசா
சதாயெங்கள் ஊர்வசியை சருவிடுவாய்நேசா
இருவரும் மதன் ரதிபோல் இரவுபகற்காலம்
மருவிவிளையாடிசுக மனுபவிப்பீர்விசாலம்
கொண்டஎண்ணம் உந்தன்கை கூடியதேமாதே
அண்டர்கோ னளித்தவனை அடைந்திருப்பாய்கோதே
பெண்கள்தனில் பெண்ணரசி பேதைகளில்நற்ரு
கண்கள்குளிர்ந்தோ மிவருன் காதலனோ

(இந்-வச.) பெண்ணே ஊர்வசி! நீ உன் நாயகனை அழைத்துக்கொண்டு உனக்கிஷ்டமான இடம் சென்று சுகிப்பா

(ஊர்-வ.) மகாபாக்கியம் வேந்தே!

(இந்-வச.) மாதே ஊர்வசி! நீ இனி என்சபைமுன் வருவது எந்நாளோ? ஒரு பதம்பாடிப் போவாய் அடி பூவை

(ஊர்-வச.) அப்படியே ஆண்டவா!

---

ஊர்-ரோட் இ-ம். சங்கராபரணம் ஏகதாளம்.

போகிந்திரா போகிந்திரா புவனரசிக
பூவையுனைமறப்பேனோ ரசிக.
கொம்மையுனைப்பார்க்குதிதோ மனமோக
கூடிஎன்னைச்சேர்ந்திடுவாய் கனத்தியாக
கட்டிமுத்தமிட்டசுகம் மறவாதே
காமினிமேலாசைதனைத் துறவாதே
திரு முத்துசாமியும் மறவேனே
தேசமெங்கும் அவர் புகழை அழைவேனே

(இந்-வச.) மெத்தவும் சந்தோஷம், போய்வருவாய் பெண்ணே ஊர்வசி! அப்பா மந்திரி?

(மந்-வச.) அரசே!

(இந்-வச.) இந்த நரபூபதிக்கு வேண்டிய விலையுயர்ந்த ரத்னபூஷணங்கள் கொடுத்தனுப்புவாய்.

(மந்-வச.) இதோ கொடுத்தேன் அரசே!

(ஊர்-வச.) சந்தனமேனியா! இனி நாம் நமது இருப்பிடம் இந்தவிமானத்திலேறி செல்வோம்வருவாய் மாரா-திரா-கோராய்.

(சந்த-மந்-வ.) ஆ! இதென்ன ஆச்சரியமாயிருக்கின்றது? சந்தன மகாராஜன் ஜலம் அருந்தி வருவேனெனச் சொல்லி சென்றவர் ஒருவாரமாகியும் திரும்பிவருத காரணம் யின்னதெனை அறியக் கூடாதவர்களாய் இருக்கின்றோமே? என்றும் அவரை இங்ஙனந் தனியாகப்போகவிடாத நாம், அன்று வேட்டையாடி அலுத்த ஆயாசத்தினால் ஒருவாறு அசட்டை பாராட்டியதன் ே, இவ்வளவு வியாகூலத்திற்கு இடந்தந்தது? இனியெப்படி.? இ ்கென்ன யோசனை சிவமே.

---

மந்திரி - ஜாவளி, பியாக - ரூபகம்.

என்னரசன்வர யின்னங்காண்கிலேன் சிவமே.

நச்சிக்கித்துவிக்கின்றாரோ யேதுங்காணேனே
)திருமலாம் பெண்ணிகனம் புன்றுச்சோனமே - (எ)

லாவிநீரருந்தி வருவேன் யென்றுமே
றைந்துசென்ற துரையைத்தேடிக் கரையுறேன்இனமே - (எ)

-ந்திதுறி பட்டுமென்னர் மேனிசோர்ந்துமே
ஏவுடல் கலிந்துரைாடுர் குலேந்தசோகமே - (எ)

ந்திகள் வெருட்ட வந்தி-வெறுப்பைக்கொண்டாரோ
நவோ கூறக்காலேனைன் யாரையுமினமே - (எ)

ாசப் பூதங்களாற் பிடிக்கப்பட்டாரோ
துவோ யின்னங்காணேன் மன்னனைமனமே - (எ)

ஏசி மாதரைக்கண்டு சரசஞ்செய்தாரோ
நாத் தாபமொந்தி ஆபத்தோசிவமே - (எ)

ந்-வ.) மனமே! நீ சற்றுநிதானி; வலதுகண் துடிக்கின் வாத்தில் கெவுளியும் பலுக்குகின்றது. இன்னங் கொஞ்ச



நேரம் இராஜனை யிங்கு யிருந்தவாறு யெதிர்பார்ப்போம். அப்பால் தேடிச்செல்லுவோம்.

(சங்-வச.) மாதே நான் இருப்பது அஸ்தினபுரம் குடிகளிட்டபயினை மிருகங்கள் அழிப்பதை கேள்விப்பட்டு நானும் என் மந்திரியும் வேட்டையாட வந்தவிடத்தே நான் அரை கொடியில் மிருகங்களையெல்லாம் வதைத்து தாகமீறி வனத்துட் பிரவேசித்து மோஹினிச்சோலை அடைந்து நீரை அருந்தவும் காவலன் அதட்டவும் சுயம்புவல்லி எதிர்த்தோன்றவும் நான் காமமீறி அவளை அடிபணிந்தேன் அப்பால் உன் மனையில் இருக்கக்கண்டேன் ஆதலால் என்மந்திரி அந்தவிடத்தில் இருப்பான் தயைசெய்து விமானத்தை அவனிருக்குமிடத்தை நோக்கி நடத்துவாயா.

(ஊர்-வச.) நாயகா மெத்த சந்தோஷம்.

(மந்-வச.) ஆ ஆ இதோ நமது அரசன் வருகின்றார் ஒரு தேவகன்னிகையை யழைத்துவருகின்றார் இவளை காதலோ தெரியவில்லை, வேந்தனால் வெளியிடப்பட்டபின்பு யோசிப்போம். அரசே! எங்களை இங்கிருத்தி தாங்கள் எங்கு சென்றீரோவென அடியேன் கொண்டிருந்த துக்கமெனும் அந்தகாரத்தை நீக்க இன்று சூரியனைப்போல் உதித்த உமது பாதங்களுக்கிதோ போற்றி.

(சங்-வச.) மந்திரி நான் இம்மாது சிரோன்மணியை இந்திரபுரத்தில் மணம் புரிந்து வந்தேன் நேசா.

(மந்-வச.) ஆனந்தம் அடைந்தேன் வணங்குகிறேன். போற்றி எங்களை ஆளவந்த தாயே.

(ஊர்-வச.) வாழிவாழி மைந்தா.

(சங்-வச.) மந்திரி! நமது அரண்மனை அடைவோம், மங்கள பேரிகை அறைவிப்பாயாக.

(மந்-வச.) அப்படியே.

(சங்-வச.) மாதே! அடி என்கண்ணே! இதோ நமது நாடு வந்தோம் அரண்மனைக்கு போவோம் வருவாயடி.

(ஊர்-வச.) சந்தோஷமடா துரையே! ஆனால் ஒன்று உன் மனதில் கவனிக்க வேண்டும், அதாவது சூரியன் உதித்தபின் நீ உறங்கப்போகாதே, உறங்கிலோ நான் நீங்கிவிடுவேன், அறிவாய் நாதா.

சம்பூர்ணம்.

---